371

# இலக்கண

371
1·57

# ஆசிரியர் ஐவர்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 FEB 1957
MADRAS
C

O-,1wz
N56
111041

வங்கடராமன் கம்பெனி
: : கும்பகோணம்

# இலக்கண ஆசிரியர் ஐவர்

வித்துவான் T. V. கோபாலன், B. O. L.
தமிழாசிரியர்
ஸர் சிவசாமி அய்யர் ஹைஸ்கூல், திருக்காட்டுப்பள்ளி

[ Printed on White Printing Paper : D. Cr. 24 lbs. ]

V. S. வெங்கடராமன் கம்பெனி
பப்ளிஷர்ஸ் :: கும்பகோணம்

பதிவு செய்தது] [விலை 12 அணா

Printed: October 1956

தமிழ் வாழ்க

ஸ்ரீ மஹாபாரதம் பிரஸ், கும்பகோணம். C.1

# முன்னுரை

தாய்மொழிப்பற்று வளர்ந்து வருகின்ற காலம் இது. ஆதலால், பள்ளியில் பயிலும் இளைஞருக்கு, நம் நாட்டுப் பழைய பேரரசர்களைப்பற்றியும், பெரும் புலவர்களைப் பற்றியும் அறிய வேண்டுமென்ற ஆர்வம் மிகுந்துள்ளது. அது காரணமாக, இன்றைய மாணவ மாணவிகளுக்குத் தமிழிலுள்ள முக்கியமான இலக்கண நூல்களையும் அவற்றை இயற்றிய ஆசிரியர்களையும் ஓரளவு அறிமுகப்படுத்தும் முறையில் இச் சிறு நூல் இயற்றப்பட்டதாகும். இதில் இலக்கண ஆசிரியர்கள் ஐவரைப்பற்றிய செய்திகளும், கதைகளும், நூற்குறிப்புக்களும் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

மாணவருக்கு அடிப்படை அறிவு ஏற்படுவதற்காகவே இப் புத்தகம் அமைந்ததாகுமாதலால் இந் நூலில் கால வரையறை முதலியன சான்று காட்டி விளக்கப்பெற வில்லை.

இந் நூலைத் தமிழுலகம் ஆதரிக்குமாறு வேண்டுகிறேன்.

—ஆசிரியர்

# உள்ளுறை


| எண் | விஷயம் | | பக்கம் |
|---|---|---|---|
| | நூன்முகம் | ... | 1 |
| 1. | தொல்காப்பியர் | ... | 5 |
| 2. | இறையனுர் | ... | 35 |
| 3. | ஐயனுரிதனுர் | ... | 53 |
| 4. | புத்தமித்திரனுர் | ... | 59 |
| 5. | வைத்திநாத தேசிகர் | ... | 70 |


தேசீய கீதம்
ஜனகண மன அதிநாயக ஜெயஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவசுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாங்கே
காயே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
ஜயஹே ஜயஹே ஜயஹே
ஜய ஜய ஜய ஜயஹே.

# நாட்டு வணக்கம்

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான்
மக்கள் எல்லாருடைய மனத்திலும்
ஆட்சிசெலுத்துகிருய்.

நின் திருநாமம், பஞ்சாப்பையும் சிந்துவையும்
குஜராத்தையும் மஹாராஷ்டிரத்தையும்

திராவிடத்தையும் ஒரிஸாவையும் வங்காளத்தையும்
உள்ளக்கிளர்ச்சி யடையச் செய்கிறது.

அது விந்திய ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது;
யமுனை, கங்கை நதிகளின் இன்ப நாதத்தில்
கலக்கிறது;

இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.
அவைநின் ஆசியை வேண்டுகின்றன;
நின்புகழைப் பாடுகின்றன;

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு
வெற்றி, வெற்றி, வெற்றி.

# இலக்கண ஆசிரியர் ஐவர்

## நூன் முகம்

உலகத்தின்கண் மக்கள் பற்பல மொழிகள் பேசி வருகின்றனர். அவற்றுள் மாந்தரின் அறிவைச் செப்பஞ் செய்து மேன்மையுறச் செய்ய வல்லனவே சிறந்த, சீரிய மொழிகளாகும். இவ்வாறு தனிச் சிறப்பு வாய்ந்த மொழிகளுள் **தமிழ் மொழி** ஒன்ருகும்.

தமிழ் மொழி மற்றொரு மொழியினின்று தோன்ருதது; தனித்து இயங்கும் தன்மையது; மிகப் பழமையானது; இனிமை யுடையது; இலக்கண வரம்பு அமைந்தது.

**இலக்கண நூல் தோன்றுதல்:** தமிழ் பண்பட்ட பழைய மொழி; அது பேச்சு வழக்கிலும் உள்ள மொழி. ஆதலால் தமிழ் மொழி வளருந்தோறும் அதில் சேர்க்கைகளும், மாற்றங்களும், கழிவுகளும் ஏற்படுதல் இயற்கை. ஒவ்வொரு மொழியின் செம்மையைக் காப்பாற்ற அதில் இலக்கண நூல்கள் தோன்றுகின்றன. இலக்கண நூல்களும் காலத்திற்கு ஏற்பப் பல மாறுதல்களுடன் இயற்றப் படுகின்றன.

**இலக்கியமும் இலக்கணமும்:** உரைநடை நூலும் செய்யுளும் பொதுவாக இலக்கியம் எனப்படும். ஒரு மொழி தோன்றி நாளடைவில் வளர்ந்து இலக்கியம் பெருகிய பின்னர் அவ்விலக்கியத்தை ஆராய்ந்து அம் மொழியின் இலட்சணங்களை எடுத்து எழுதலாயினர்.

இதனாலேயே "இலக்கியம் கண்டதற் கிலக்கணம் இயம்பலின்" என்று நன்னூல் ஆசிரியரும் கூறியுள்ளார். [இலட்சணம் = இலக்கணம் = அழகு.]

இலக்கியத்திற்கும் இலக்கணத்திற்கும் உள்ள தொடர்பை அகத்தியர் அடியிற்காணும் சூத்திரத்தில் அழகாக விளக்கியுள்ளார்.

"இலக்கியம் இன்றி இலக்கணம் இன்றே
எள்ளின் றாகில் எண்ணெயும் இன்றே
எள்ளினின் றெண்ணெய் எடுப்பது போல
இலக்கி யத்தினின் றெடுபடும் இலக்கணம்."

**இலக்கண அறிவின் முக்கியத் தன்மை :**

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்."

—ஔவையார்

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு."

—திருவள்ளுவர்

இவ்விரு கூற்றுக்களும் இலக்கண அறிவின் முக்கியத் தன்மையைப் புலப்படுத்துகின்றன அல்லவா?

இலக்கண விதி விலக்குகளை ஐயந்திரிபற அறிந்தால் தான் நம் தாய்மொழியைத் திருத்தமாகப் பேசவும் எழுதவும் இயலும். தமிழ் இலக்கியங்களின் அழகையும், நுட்பங்களையும் சுவைப்பதற்கு இலக்கணம் பெரிதும் பயன்படுகிறது. பிறமொழிக் கலப்பினால் கேடுறாமல் தமிழ் மொழியைப் போற்றி வளர்ப்பதற்கு இலக்கண விதிகள் இன்றியமையாதனவாகும்.

**தமிழ் இலக்கணத்தின் தனிச் சிறப்புக்கள் :** பிற மொழிகளில் காணப் பெறாத இயல், இசை, நாடகம்

என்னும் முத்தமிழ் பற்றிய இலக்கணங்கள் தமிழ்மொழியில் இயற்றப்பெற்றுள்ளன. அகப்பொருள், புறப்பொருள் என்ற பாகுபாடுகள் நம் மொழியிலேதான் காணப்படுகின்றன; அவற்றிற்குத் தனித்தனி இலக்கண நூல்களும் ஏற்பட்டுள்ளன.

மேலும், எழுத்து இலக்கணம், சொல் இலக்கணம், பொருள் இலக்கணம், யாப்பு இலக்கணம், அணி இலக்கணம் என்ற ஐந்து பெரும் பகுதிகளை உடையதாகும் நம் தமிழ் இலக்கணம்.

**இலக்கண ஆசிரியர்கள்:** தமிழ் மொழியில் இலக்கண நூல்கள் தனிச் சிறப்புப் பெற்றுள்ளன. முற்காலத்தில் நூல் என்றால் இலக்கண நூலையே பெரும்பாலும் குறிக்கும்: ஆசிரியர் என்னும் சொல் இலக்கண ஆசிரியரையே குறிப்பிடும். சரித்திரம் எட்டாத காலம் முதல் பல பேராசிரியர்கள் தோன்றிப் பற்பல இலக்கண நூல்களை இயற்றியுள்ளனர். அகத்திய முனிவரின் சீடராகிய தொல்காப்பியர் **தொல்காப்பியம்** என்ற இலக்கண நூலை இயற்றினர். பின்பு இறையனார் அருளிய **இறையனார் அகப்பொருள்** என்னும் நூல் அகப்பொருள் இலக்கணத்தைக் கூறுவதாகும். கடைச் சங்க காலத்திற்குப்பின் ஐயனாரிதனார் என்ற புலவர் **புறப்பொருள் வெண்பாமாலை** என்னும் நூலை இயற்றி அதில் புறப்பொருளின் இலக்கணத்தை விவரித்தனர். பின்னர்த் தோன்றிய புத்த மித்திரனார், வைத்தியநாத தேசிகர் இவர்கள் முறையே **வீர சோழியம், இலக்கண விளக்கம்** என்ற இலக்கண நூல்களை இயற்றினர்.

தொல்காப்பியர், இறையனுர், ஐயனுரிதனுர், புத்தமித்திரனுர், வைத்தியநாத தேசிகர் இவர்கள் இயற்றிய நூல்களே பெரும்பாலும், பின்பு, எழுந்த நூற்றுக் கணக்கான இலக்கண நூல்களுக்கு முதல் நூலாகவும் வழிகாட்டியாகவும் அமைந்தன. ஆதலால் அன்னுர் இலக்கணம் இயற்றிய வரலாறுகளை இந் நூலில் அறிவோம்.

---

# 1. தொல்காப்பியர்

தமிழ் மொழியில் முதன்முதல் இலக்கண நூல்கள் எழுதியவர் அகத்தியரும் தொல்காப்பியரும் ஆவர். இவர்கள் சரித்திரம் எட்டாத காலத்தில், அஃதாவது ஏறத்தாழ ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே வாழ்ந்து வந்தவர்கள். இவர்கள் தமிழ் இலக்கண நூல் இயற்றிய வரலாறுகளை ஈண்டுக் காண்போம்.

## அகத்தியர் தென்திசை வருதல்

முன்னொருகால் இமயமலையில் சிவபெருமானுக்கும் பார்வதியாருக்கும் திருமணம் நிகழ்ந்தது என்பர். அத்தருணம் எல்லாத் தேவர்களும் முனிவர்களும் இமயம் சென்று பெருந் திரளாகக் கூடினர். அவர்களின் பளுத் தாங்காது வடபக்கம் தாழ்ந்தது; தென்பக்கம் உயர்ந்தது. அதுபொழுது பூமிக்கு என்ன நேரிடுமோ என்று அனைவரும் அஞ்சினர்; செய்வதறியாது திகைத்தனர். சிவபெருமான் முனிவர் கூட்டத்தை நோக்கினார். முனிவர்களுள் சிறந்த அகத்தியரை அண்மையில் அழைத்து, "தென்திசை உயர்ந்துவிட்டது. தவத்தால் மேம்பட்ட நீ அங்குச் சென்று தங்கினால்தான் இரு பக்கமும் சமனாகும். ஆதலினால் உலக நன்மைக்காகத் தென்திசை செல்லுக" என்று மொழிந்தனர். இறைவனது ஆணையைச் சிரமேற் கொண்ட அகத்திய முனிவர், "எம்பெருமானே! தென்னாட்டில் வழங்கும் மொழி தமிழ் மொழியாகும். அடியேன் அங்குச் சென்று வாழ்ந் திருத்தல் எங்ஙனம் இயலும்?" என்று விண்ணப்பம் செய்தனர். சிவபெருமான் அகத்தியருக்கு ஆறுதல் கூறித் தமிழ் மொழியை அவருக்கு உபதேசித்து அவரைத் தென்திசைக்கு அனுப்பினார்.

## அகத்தியரின் திருமணம்

அகத்தியர் கங்கையில் நீராடி, அந்நீரைத் தமது கமண்டலத்தில் எடுத்துக்கொண்டு தென்திசையை நோக்கிப் புறப்பட்டார். வழியில் புலத்தியர் என்ற முனிபுங்கவரைச் சந்தித்தார். அவர் அகத்தியரை வரவேற்ருர்; தென்திசை நோக்கிச் செல்லும் காரணத்தைக் கேட்டுத் தெரிந்துகொண்டார். அகத்தியருக்கு அவர் செல்லுமிடத்துப் பணிவிடை செய்துகொண்டு வாழ்க்கைத் துணையாக இருக்கும் பொருட்டு, புலத்தியர் தம்முடைய இளைய சகோதரி **உலோபாமுத்திரை** என்பவளைத் திருமணம் செய்வித்தார். ஆனல் அகத்திய முனிவர், ''நான் தென்னுட்டில் ஓர் ஆச்சிரமத்தை நன்கு அமைத்துக்கொண்டு, பின்னர் நும் தங்கையை அழைத்துச் செல்வன்'' என்று புலத்தியரிடம் கூறி, உலோபாமுத்திரையை அவ்விடமே விட்டு விட்டுத் தமது வழியே ஏகினுர்.

## தமிழ்ச் சங்கத் தலைவராதல்

அகத்தியர் தென்னுடு அடைந்ததும் பூமி சமனுறக் கண்டு அகமகிழ்ந்தார். அங்கிருந்த பாண்டிய மன்னனுல் போற்றப்பட்டு, அவ்வரசனுல் நிறுவப்பட்ட தமிழ்ச் சங்கத்திற்குத் தலைவரானுர். சங்கத்திலிருந்து தமிழ் ஆராய்ச்சி செய்ததன் பயனுக அவருடைய புகழ் நாடெங்கும் பரவியது.

## பொதிய மலையில் ஆச்சிரமம் அமைத்தல்

அகத்தியரின் தவத்திற்குப் பாண்டியன் அரண்மனை அமைதி யளிக்கவில்லை. அதனுல் அவர் தமது ஆச்சிரமத்தை எங்கு அமைப்பது என்று சிந்தித்துக்கொண்டே

பாண்டிய நாட்டில் பல இடங்களையும் சுற்றிப் பார்த்தனர் ; இறுதியில் பொதிய மலையை அடைந்தனர். அங்கே சந்தன மரங்கள் ஓங்கி வளர்ந்திருந்தன : அவற்றால் நறுமணம் கமழும் தென்றல் காற்று வீசியது. அம் மலைப்பாங்கே தமது தவத்திற்கு உகந்த இடமாகக் கருதி, அங்குத் தமது ஆச்சிரமத்தை அமைத்துக்கொள்ள அடிகோலினார். முள்ளும் புதரும் செறிந்து கிடந்த தரையைத் திருத்தி ஆச்சிரமத்தை அமைத்துக்கொண்டார்.

## அகத்தியரின் மாணவர்கள்

அகத்தியர் பொதிய மலையை அடைந்து தங்கியிருந்த செய்தி பலருக்கும் தெரியலாயிற்று. அவருக்குப் பணி செய்துகொண்டு அவர்பால் தமிழ் பயிலுவதற்கு விருப்பம் கொண்டு பொதிய மலைக்கு மாணவர் திரளாக வந்து சேர்ந்தனர். ஆனால் அவர்கள் அனைவருக்கும் தமிழ் கற்பிக்கப் போதிய நேரம் அகத்தியருக்குக் கிடைக்க வில்லை. உலக நன்மைக்காக நாளின் பெரும் பகுதியைத் தியானத்திற் செலவிடும் முனிவருக்கு நூற்றுக்கணக்கான சீடர்களுக்குத் தமிழ் போதிக்க நேரம் ஏது? ஆதலின் சங்கப்புலவர் பலரிடம் தமிழ் கற்குமாறு ஏனைய மாணவர்களை அனுப்பிவிட்டுப் பன்னிரண்டு சீடர்களை மட்டும் தம்மிடம் வைத்துக்கொண்டார். அகத்தியரிடம் தமிழ் கற்றுப் புலமை பெறும் நற்பேறு பெற்றவர் **தொல்காப்பியர், அதங்கோட்டாசிரியர்** முதலிய பன்னிருவராவர்.

சீடர்களுக்கு இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழையும் அகத்தியர் கற்பித்து வந்தார்; அவ்வப் போது தாம் கற்பித்த விஷயங்களை நூற்பா வடிவாக

எழுதிவந்தார். அகத்தியர் எழுதிய நூல் செவ்வனே முடிவுற்றது. அது பன்னீராயிரம் சூத்திரம் கொண்ட **பேரகத்தியம்** என்ற பெரு நூலாக அமைந்தது. மதுரைச் சங்கத்தில் அந் நூல் அரங்கேற்றப்பட்டது. அந் நூலின் புகழ் நாடு முழுவதும் பரவியது. முன்பு சிவபெருமான் இயற்றியருளிய இசை நுணுக்க நூலின் விரிவாக அது அமைந்தது. அகத்தியமே தமிழிலக்கண முதல் நூலாகக் கொள்ளப்பட்டது. அகத்தியருடைய தமிழ்த் தொண்டு குன்றின் மேலிட்ட விளக்காகத் திகழ்ந்தது. ஆனல் பிற்காலத்தில் அகத்தியம் கிடைக்கப்பெருமல் வழக்காறற்றுப் போயிற்று.

## உலோபாமுத்திரையை அழைத்துவர அகத்தியர் சிந்தித்தல்

மாணவர்களின் முயற்சியால் பொதிய மலை ஓர் பூங்காபோல் விளங்கியது. ஆச்சிரமம் நன்கு அமைந்து விட்டபடியால் இனி உலோபாமுத்திரையை அழைத்து வருவது தமது கடமை என அகத்திய முனிவர் உணர்ந்தார். அவர் பின்வருமாறு சிந்திக்கலானுர்:

"நான் நேரிற் புலத்தியர் ஆச்சிரமம் சென்று உலோபாமுத்திரையை அழைத்து வருதல் இயலாது. ஏனென்ருல், அங்குச் சென்று திரும்பப் பல மாதங்கள் ஆகும். அதனல் எனது தவத்திற்கும் தியானத்திற்கும் இடையூறு நிகழும். ஆதலால், எனது மாணவரில் ஒருவனையனுப்பி அவன் மூலம் உலோபாமுத்திரையை அழைத்து வரலாம் என்று நினைக்கிறேன். மாணவர்களில் யாரை அனுப்புவது? ஒழுக்கத்திலும் கடமை உணர்ச்சியிலும் எல்லா மாணவர்களும் மேம்பட்டவர்களே. ஆனல் அறிவிலும் ஆற்றலிலும் தொல்காப்பியனே

எல்லோரினும் தலைசிறந்தவன். அவன் மதி நுட்ப முடையவன்; அவன் தவமும் செய்து பழகியவன்; சில மாதங்கள் பிரயாணம் செய்து தன் குரு பத்தினியை அழைத்து வரும்வரை நூலாராய்ச்சியில் ஈடுபடாமை நேரிடினும் அதனால் அவனுடைய ஞானத்துக்குக் குறைவு ஒன்றும் ஏற்படாது. எனக்கு அடுத்தபடி எல்லாத் தகுதிகளும் பெற்றவன் அவனே. மேலும், அவன் ஒரு முனிவருடைய குமாரன். ஜமதக்னியின் புதல்வனாகிய அவன் முனிவர்களுடைய மனைவிமார்களிடம் நடந்து கொள்ளும் முறைகளை நன்கு அறிந்தவனே. ஆதலின் அவனையே அனுப்புவேன்'' என்று தமக்குள் முடிவு செய்தார்.

### உலோபாமுத்திரையை அழைத்துவரத் தொல்காப்பியனை அனுப்புதல்

மறுநாட்காலையில் காலைக் கடன்களை முடித்த தொல்காப்பியன் வழக்கம்போல் குருவின் திருவடிகளை முதலில் வணங்கினான். பின்பு ஏனைய பதினொரு சீடர்களும் முறையே வணங்கினர். முனிவர் மற்றவர்களை நூலாராய்ச்சிக்கு அனுப்பிவிட்டார். தொல்காப்பியன் அருகு நின்றிருந்தான். அன்று குருவின் முகத்தில் என்றும் காணாத ஒரு ஒளி பரவியிருந்ததைக் கண்ணுற்றான். அது என்ன என்று அறியாது ஆலோசனையில் ஆழ்ந்திருந்த தொல்காப்பியனை நோக்கி அகத்தியர் ''முனி குமாரா! நீ என்னிடம் இதுவரை இரு மொழிகளையும், தவமுறைகளையும், யோக சாத்திரங்களையும், தியான முறைகளையும் கற்றறிந்ததற்குக் கைம்மாறாக உன்னிடம் காணிக்கை பெற விரும்புகிறேன்'' என்று மொழிந்தார்.

தொல்காப்பியன் மீண்டும் அடிபணிந்து "ஐயன்மீர்! யானே தங்கள் திருவடிகளின் நிழலில் வாழும் அடியவன். என்னிடம் உள்ளதாய்த் தாங்கள் என்ன கேட்கிறீர்களோ அதைத் தருவதற்கு உடன்படுகிறேன். தேவரீர் கட்டளையை நான் என்றும் மறுத்தது இல்லையே" என்று பணிவுடன் விடை பகர்ந்தான்.

## உலோபாமுத்திரையை அழைத்துவர ஏவுதல்

அகத்தியர், "தொல்காப்பியா! சிவபெருமானுடைய ஆணையின்படி இமயத்தினின்று நான் தென்திசை நோக்கி வரும்பொழுது புலத்தியர் ஆச்சிரமத்தை அடைய நேர்ந்தது. அம் முனிவர் வேண்டுகோளின்படி அவருடைய சகோதரி உலோபாமுத்திரையை மணஞ் செய்துகொண்டேன். ஆனால் காடும் செடியும் நிறைந்த தென்னாடு எனக்குப் புதியதாகையால், உலோபா முத்திரையை உடன் அழைத்துவரவில்லை. நான் செல்லுமிடத்தில் ஆச்சிரமம் ஒன்று அமைத்தபிறகு அன்னவளை அழைத்துப் போவதாகப் புலத்தியரிடம் கூறி வந்தேன். வாழ்க்கைக்கு வேண்டிய வசதிகள் இங்கு ஏற்பட்டுவிட்டபடியால் இனித் தாமதம் செய்யாது உலோபாமுத்திரையை அழைத்து வருவது நியதியாகும். ஆனால் நான் நேரிற் சென்று அழைத்து வரப் பல நாட்கள் ஆகும். அதனால் என் தவம் கெடும்; ஆச்சிரம மாணவர்களுக்குப் பாடம் கற்பிப்பதும் தடைப்படும். ஆதலால் நீ புலத்தியரது ஆச்சிரமம் சென்று உலோபா முத்திரையை விரைவில் அழைத்து வந்து சேர்வாயாக!" என்று கூறினர்.

தொல்காப்பியன் சில நிமிடங்கள் மௌனமாயிருந்தான். "ஏன் தயங்குகிருய்? சொல் உன் கருத்தை" என்று வினவினுர் முனிவர்.

அன்னையை எவ்விதம் அழைத்து வருவது என்பதைத் தெளிவாகச் சொல்லும்படி வேண்டினுன் தொல்காப்பியன். "புலத்தியரின் ஆச்சிரமம் வடக்கில் மிகத் தொலைவில் உள்ளது. இடையே காடுகளும், மலைகளும், ஆறுகளும் உள்ளன. அவற்றையெல்லாம் கடந்து நீ கால்நடையாகச் செல்லுதல் வேண்டும். உலோபா முத்திரையையும் கால்நடையாகவே அழைத்து வர வேண்டும். இரவில் நடந்தால் அவளுக்கு முன்சென்று வழிகாட்டி வா. பகலில் நடக்கும்பொழுது அவளுக்குப் பின்னுல் காவலாக இருந்துவா. ஆனுல் உனக்கும் அவளுக்கும் நான்கு கோல் அளவு இடைவெளி இருக்க வேண்டும். இதை நீ மறத்தல் கூடாது" என்ருர் முனிபுங்கவர். தொல்காப்பியன் முனிவரை வணங்கித் தனது பயணத்தைத் தொடங்கினுன்.

## தொல்காப்பியன் புலத்தியரிடம் செல்லுதல்

குருதேவரின் நல்லாசியைப் பெற்ற தொல்காப்பியன் மலைகளையும், ஆறுகளையும், காடுகளையும் கடந்து பல நாட்கள் பயணம் செய்து புலத்தியர் இருந்த ஆச்சிரமத்தை அடைந்தான். முகத்தில் கவர்ச்சியும், உடலில் வலிமையும், மனத்தில் தூய்மையும் தெய்விக ஒளியும் வாய்ந்த தொல்காப்பியனைக் கண்ட புலத்தியரின் சீடர்கள் உவகையுடன் அவனைத் தமது குருவினிடம் அழைத்துச் சென்றனர். தொல்காப்பியன் புலத்தியரை அடிபணிந்து தென்திசை நோக்கி வணங்கித் தான் அகத்தியரின் முதல்

மாணவன் என்பதைக் குறிப்பாகத் தெரிவித்தான். புலத்தியர் தொல்காப்பியனுடைய அறிவையும், தூய்மையையும் மெச்சினுர். அங்கு அகத்தியர் உலோபா முத்திரையைப் பிரிந்து சென்று பொதிய மலையை அடைந்ததுமுதல் நிகழ்ந்த செய்திகளைத் தொல்காப்பியனைக் கேட்டுத் தெரிந்துகொண்டார். தம் சகோதரி உலோபாமுத்திரையை அவர் கூப்பிட அவள் அங்கு வந்தனள். குரு மனைவியைக் கண்ட தொல்காப்பியன் அந்த அம்மையின் முன் விழுந்து வணங்கிக் கைகட்டி வாய்புதைத்து நின்றுன். அவன் தன் குரு தனக்கிட்ட கட்டளையைப் புலத்தியரிடம் கூறினுன். தமையனுரின் குறிப்பறிந்து உலோபாமுத்திரை பிரயாணத்துக்குத் தயாரானுள். புலத்தியர் அவளை அனுப்புமுன் "அம்மா! அகத்தியரின் மனைவியாகும் பெரும் பேறு பெற்றவள் நீ. அப் பெரியாருடைய தவ வாழ்க்கைக்குப் பணிவிடை செய்து அவர் முகம் கோணுமல் நடந்து, நல்லவள் என்று வாழ வேண்டியதே உன் கடமை. அது உனக்கும், அவருக்கும், எனக்கும் பெருமை தருவதாகும்" என்று அருளினுர்.

## உலோபாமுத்திரையை அழைத்து வருதல்

உலோபாமுத்திரை மௌனமாக முன்னே நடந்தாள். புலத்தியரிடம் விடைபெற்ற தொல்காப்பியன் நான்கு கோல் இடைவெளிவிட்டுப் பின் செல்லலானுன். இருவரும் கால்நடையாகப் பல மாதங்கள் நடந்தனர். தன் குருநாதன் கட்டளையை மீருமல் தொல்காப்பியன் அவ்வம்மையாருக்குப் பணிவிடை செய்துவந்தான். காட்டில் வாழ்ந்து பழகிய உலோபாமுத்திரையும் சலிப்பில்லாமல்

மலைகளை ஏறியும், ஆறுகளை நீந்தியும், பாலைகளைக் கடந்தும் மதுரை வரையில் தொல்காப்பியனுடன் வந்து சேர்ந்தாள்.

தெய்வச்செயலாக வையை யாற்றில் வெள்ளம் கரை புரண்டு ஓடியது. வெள்ளத்தில் பெரிய மரங்களும், யானை முதலிய பெரிய விலங்குகளும் அடித்துச் செல்லப் பட்டன. நீர் சுழிசுழியாக அலை மோதி வெகு வேக மாகச் சென்றுகொண்டிருந்தது. எதற்கும் அஞ்சாத தொல்காப்பியனின் மனம் அவ்வாற்றைக் கண்டதும் கலக்கமுற்றது. அவன் ஆற்றங்கரையை அடைந்ததும் மரம்போல அசைவற்று நின்றான். கோதாவரி, கிருஷ்ணா ஆறுகளைத் தாண்டிய அவனுடைய கால்கள் வையை யாற்றில் அடிவைக்க மறுத்தன. அவனுக்குத் தன்னைப் பற்றிய கவலையில்லை. குரு பத்தினியைக் குருதேவரிடம் சேர்ப்பிக்கவேண்டுமே என்ற கவலை அவனை வருத்தியது.

அவன் அசைவற்று நிற்பதை உலோபாமுத்திரை கண்ணுற்றாள். "கோதாவரி முதலிய பெரிய ஆறுகளைக் கடந்த தொல்காப்பியன் இப்பொழுது ஏன் தயங்கி நிற்கின்றான்? "வையை யாறு பெருக்கெடுத்து ஓடுவது உண்மைதான். ஆனால் அதனைத் தாண்டுவது ஒரு கடுஞ் செயல் இல்லையே" என்று நினைத்தாள். தொல்காப்பியன் அம்மையாரை வணங்கினான். "தாயே! ஆறு இவ் வண்ணம் அச்சமுறுமாறு கரைபுரண்டு ஓடுகிறதே. நீர்ச்சுழிகள் அதிகமாக இருக்கின்றனவே. என் செய்வது? தாங்கள் எப்படித் தாண்டுவீர்கள்? எனக்குப் புலப்பட வில்லை. ஆறு வடிந்தபின் செல்வதுதான் நல்லது.

என்றாலும், தங்கள் கட்டளைப்படிச் செய்ய மனமுள்ள வனாய் இருக்கின்றேன்'' என்று சீடன் வணக்கத்துடன் மொழிந்தான்.

''முனி குமாரா! என்னைப்பற்றிக் கவலைப்படாதே. உனக்கு இந்தச் சிறிய ஆற்றைத் தாண்டுவதில் தயக்கம் ஏற்படவேண்டியதே இல்லை. ஆதலின் கிளம்பு. ஆற்றைக் கடந்து விரைவில் முனிவரை அடைவோம். பொதிய மலை அண்மையிலேயே இருக்கிறதன்றோ? ஆற்றில் நீர் வடியும் வரையில் தாமதிக்க நான் விரும்ப வில்லை'' என்றாள் உலோபாமுத்திரை.

''தங்கள் கட்டளையைச் சிரமேற்கொண்டு நிறை வேற்றக் காத்திருக்கின்றேன்'' என்று சொல்லி ஆற்றில் தொல்காப்பியன் குதித்தான். ஆற்றில் நீந்திச் சென்ற போதும் குரு பத்தினி பின்னால் நீந்தி வருகிறாளா என்று அடிக்கடி கவனித்துக்கொண்டே வந்தனன். அவன் அக்கரையின் அருகில் வந்து விட்டான்; பின்னால் திரும்பிப் பார்த்தான். குரு பத்தினியைக் காணவில்லை. என் செய்வான் பாவம்! நான்கு பக்கமும் சுற்றிப் பார்த்தான். ஒரு சுழலில் அகப்பட்டுக் குரு பத்தினி தடுமாறுவதைக் கண்டனன். உடனே சென்று உதவு வதற்குக் கிளம்பினான். ஆனால் குருவினுடைய கட்டளை நினைவுக்கு வந்தது. முன்னும் பின்னும் நான்கு கோல் அளவு விலக்கம் இருக்கவேண்டும் என்பது குருவின் ஆணை அன்றோ? குருதேவனைத் துதித்தான்.

தொல்காப்பியன் கரைக்கு விரைந்து நீந்தி அங்கி ருந்த ஒரு மூங்கிற்கோலை ஒடித்து எடுத்துக்கொண்டான். அது நான்கு கோல் நீளம் இருக்கிறதா என்று பார்க்கவும்

அவனுடைய பரபரப்பு இடந்தரவில்லை. அவன் வேகமாக நீந்திச் சென்று அம்மையாரிடம் மூங்கிற்கோலை நீட்டினான். உலோபாமுத்திரை அதனைப் பிடித்துக்கொண்டாள். தொல்காப்பியன் அக்கோலின் உதவியால் இழுத்துக்கொண்டு அம்மையாரை கரையில் சேர்த்தான். உலோபாமுத்திரை தொல்காப்பியனை அவனது அரும் பணிக்காக வாழ்த்தினாள்.

## தொல்காப்பியனுடைய கழிவிரக்கம்

கரையை அடைந்த தொல்காப்பியன் மூங்கிற் கோலைக் கவனித்தான். அது நான்கு கோல் நீளம் இல்லை. முனிவரது சொல்லை மீறி நடக்கும்படி நேர்ந்துவிட்டதே என்று மனம் வருந்தினான். அவனுடைய முகம் வாடியிருப்பதைக் குறிப்பால் உணர்ந்த உலோபாமுத்திரை அதன் காரணத்தை வினவினாள். "அம்மையே! நான் தங்களிடம் நீட்டிய மூங்கிற்கோல் நான்கு கோல் நீளம் இல்லை. எனது ஆசிரியர் எனக்கு இட்ட கட்டளையோ நான் தங்களிடமிருந்து நான்கு கோல் தூரம் விலகியே வரவேண்டும் என்பது. என் செய்வேன்?" என்று கூறித் தொல்காப்பியன் கண்ணீர் பெருக்கினான்.

"முனி குமாரா! தவறு யாருடையதும் அன்று. நானும் என் கணவரைக் காணவேண்டும் என்ற விருப்பத்தாலே வெள்ளம் பெருகியோடும் ஆற்றில் குதித்து நீந்துவதற்குத் துணிந்தேன். நீயும் குருவின் மனைவியை ஆறு இழுத்துச் செல்லாதவாறு காப்பாற்றினாய். இதற்காகக் குருதேவர் கோபங்கொள்ள மாட்டார்" என்று உலோபாமுத்திரை ஆறுதல் கூறினாள்.

ஒருவாறு தொல்காப்பியன் மனம்தேறிப் பொதிய மலையை நோக்கிக் குரு பத்தினியுடன் புறப்பட்டான். அவனுடைய மனம் அமைதி அடையவில்லை. அவன் பலவாருகச் சிந்திக்கலானுன். அப்பொழுது அவன் மனம் "நீ இச் செயல் செய்யாவிட்டால் உனது குரு பத்தினியை வையை யாறு அடித்துச் சென்றிருக்கும். குரு பத்தினியை இழந்து குருவின் முகத்தில் விழிப்பதை விட அவருடைய கட்டளையை ஆபத்துக் காலத்தில் சிறிது மீறி ஒரு பெரிய நன்மை செய்வது தவறு ஆகாது. நீ செய்ததே சரி. கவலைப்படாதே" என்று கூறியது. உலோபாமுத்திரையும் "தொல்காப்பியனே! நீ கவலையுருதே, முனிவர் கோபங்கொள்ளமாட்டார். நீ உன் கடமையைத் தவருது செய்தனை. முனிவர் உன்னை ஆசீர்வதிப்பார்" என்று தேற்றி வந்தனள்.

## தொல்காப்பியன் பொதிய மலைக்குத் திரும்புதல்

நாட்கள் மாதங்கள் ஆயின. ஓர் ஆண்டுக்கு மேல் ஆயிற்று. சென்ற தொல்காப்பியன் வந்து சேரவில்லை. இதற்கு இடையே பல புலவர்கள் நூல்களை இயற்றி அகத்தியரிடம் கொண்டுவந்து காட்டிச் சென்றனர். மற்றவர்கள் நூல் இயற்றுவதைப் பார்த்து, அகத்தியருடைய மாணவர்களுக்கும் நூல்கள் இயற்றவேண்டும் என்ற ஆவல் உண்டாயிற்று. ஆனுல் தங்களுடைய தலைமை நண்பனுகிய தொல்காப்பியன் இருந்தால் அவனுடைய உதவியால் நூல்கள் இயற்றலாம். 'தொல்காப்பியன் எப்பொழுது வரப்போகிருன்' என்று எல்லோரும் அவனுடைய வருகையை எதிர்நோக்கி இருந்தனர்.

ஒரு நாள் மாலையில் தொல்காப்பியன் குரு பத்தினி யுடன் தொலைவில் வருவதைப் பிற மாணவர் பார்த்ததும் அம்மையாருக்குத் திசை நோக்கி வணக்கம் செலுத்தினர்; இருவரும் வந்துகொண்டிருக்கும் செய்தியைத் தம் குருதேவருக்குத் தெரிவித்தனர். முனிவர் ஆச்சிரமத்தின் வாயிலில் வந்து நின்றார். முதலில் உலோபாமுத்திரையும், பிறகு தொல்காப்பியனும் குருதேவரை வணங்கி நின்றனர். தொல்காப்பியன் நான்கு கோல் தொலைவில் நின்றுகொண்டிருந்தான். குருதேவர் உலோபா முத்திரையை ஆச்சிரமத்தினுள் செல்லுமாறு சைகை காட்டினார். அவள் உள்ளே சென்றாள்.

குருதேவர் தொல்காப்பியனை அருகு அழைத்தார்; அவன் கிளம்பிச் சென்றதுமுதல் திரும்பி வந்தது வரையில் நிகழ்ந்தனவற்றை விரிவாகச் சொல்லுமாறு கேட்டார். தொல்காப்பியன் நிகழ்ந்தனவற்றை ஒன்று விடாமல் தெரிவித்துவந்தான். வையை யாற்றை உலோபாமுத்திரை கடக்க முடியாத தருணத்தில் நான்கு கோல் நீளத்தைவிடச் சிறிய மூங்கிற்கோலை ஒடித்து நீட்டி அவளை அழைத்துவர நேர்ந்ததையும் குறிப் பிட்டான். ஆபத்தான காலத்தில் மூங்கிற் கோலின் நீளத்தை நன்கு கவனிக்க இயலவில்லை என்பதையும் பணிவுடன் தெரிவித்தான். 'நீ செய்தது சரி அன்று' என்று கூறி அகத்தியர் சிறிது சினந்தார். "என் சொல்லை மீறி நடந்துகொண்ட நீங்கள் சுவர்க்கபேறு பெறுதலை இழப்பீர்கள். ஆனால் ஒரு புண்ணியச் செயலுக்காக நெருக்கடியான காலத்தில் இங்ஙனம் செய்ததால் உங்களுக்குக் கடுஞ் சாபம் இட என் மனம் ஒப்பவில்லை" என்று குறிப்பிட்டார்.

தனது செயலுக்காக ஆசிரியர் மகிழவேண்டியிருக்க, அவ்வாறு செய்யாது தன்னையும் தன்னால் குருபத்தினியையும் அகத்தியர் சபித்தது தொல்காப்பியனுக்கு வருத்தத்தைத் தந்தது. தொல்காப்பியன் சிறந்த ஞானி; ஐம்பொறிகளையும் அடக்கியவன்; தவத்திலும் தியானத்திலும் பழகியவன்; நிரம்பிய நூற் புலமை உடையவன்; என்றாலும் ஆண்டில் இளையவன். தன் குரு தன்னைச் சபித்தது நியாயமில்லை என்று அவன் நினைத்தான். அவனை அறியாமல் அவனுடைய வாய் முணுமுணுத்தது. “நானும் குருபத்தினியும் ஒரு தவறும் செய்யாதிருக்கவும் எம்பெருமானாகிய தாங்கள் எங்களைச் சபித்த தவறுக்காகத் தங்கட்கும் சுவர்க்கப்பேறு கிட்டாததாகும்” என்றான் தொல்காப்பியன். முனிவருடைய காதில் அச் சொற்கள் விழவே “யாது கூறினாய்?” என்றார். தொல்காப்பியன் வாய் திறக்கவில்லை. அன்று குருவும் சீடனும் வேறு எதுவும் பேசவில்லை. ஆனால் மாணவருக்குள் ஒரு குழப்பம் ஏற்பட்டது. “குருதேவர் தொல்காப்பியனிடம் கோபம் கொண்டிருக்கிறார். என்ன நிகழுமோ?” என்று அவர் அஞ்சினர்.

தொல்காப்பியனுக்கு அடுத்தபடியாக அதங்கோட்டாசிரியன் என்ற மாணவன் கூர்த்த மதியுடையவன். அவன் குருதேவரின் பெருமையை மற்றவர்களைவிட நன்றாக அறிவான். “நண்பர்களே! நம் குருதேவருக்குப் பால் பொங்குவதுபோலக் கோபம் மீறிவரும்; ஆனால் நீர் ஊற்றியதும் பால் தணிவதுபோல அவருடைய சினம் உடனே நீங்கிவிடும். அவருக்குத் தொல்காப்பியனிடம் எப்பொழுதும் மிகுந்த அன்பு உண்டு. அந்த அன்பு என்றும் மாறாதது. தொல்காப்பியனும் மாசற்ற

உத்தமன். அவன் ஏதோ வெகுண்டு குருதேவரைப் பற்றி ஒன்று இரண்டு சொற்கள் மொழிந்திருக்கலாம். அதனால் அவனுடைய பெருமை சிறிதும் குறையாது'' என்று மற்ற நண்பர்களிடம் பகர்ந்தான்.

## பன்னிருபடலம் இயற்றப்படுதல்

மறுநாட்காலைமுதல் வழக்கப்படி ஆசிரியரும் மாண வரும் தமிழாராய்ச்சி செய்யத் தொடங்கினர். உலோபா முத்திரை வந்ததுமுதல் ஆச்சிரமத்துக்கு ஒரு தனிக் கவர்ச்சி ஏற்பட்டது. குருதேவருக்கும் மாணவர்களுக் கும் உணவு சமைத்துப் பரிமாறும் பொறுப்பு அம்மையாரைச் சேர்ந்ததால் மாணவர்களுக்குத் தமிழாராய்ச்சி செய்ய மிகுதியான நேரம் கிடைத்தது. தான் வெளியே சென்றிருந்த ஓராண்டுக் காலத்தில் சிறப்பான நிகழ்ச்சிகள் எவையேனும் நடந்தனவா என்று தொல்காப்பியன் தன் நண்பர்களைக் கேட்டான். பலர் பல நூல்களை இயற்றிக் குருதேவரிடம் வந்து காட்டிச் சென்றனர் என்பதை அவர்கள் தெரிவித்தனர். பின்னர், ''தொல்காப்பியா! நாம் பல ஆண்டுகள் குருதேவரின் ஆச்சிரமத்தில் ஒன்றாகக் கல்வி கற்றுள்ளோம். மன வேறுபாடு இல்லாமல் ஒன்றாகக் கலந்து பழகியுள்ளோம். நமது கல்விக் காலம் பெரும்பாலும் முடிந்துவிட்டது. இன்னும் ஒன்றிரண்டு ஆண்டுகளுக்குள் குருதேவர் நம்மை நம்முடைய சொந்த இருப்பிடங்களுக்கு அனுப்பி விடுவார். அதற்குள் நாம் அகத்தியர் பெருமானுடைய மாணவர்கள் என்பதை உலகம் என்றும் மறவாதிருக்கும் வகையில் ஒரு நூல் இயற்றவேண்டும். உனது உள்ளக் கிடக்கையைச் சொல். இந்த ஓராண்டாக உன்னுடைய வருகையை எதிர்பார்த்திருந்தோம். நீ எங்களுடைய

இந்த விருப்பத்திற்கு இணங்கவேண்டும்'' என்று ஒரே மூச்சில் பிற மாணவர் சொல்லி முடித்தனர்.

நண்பர்களுடைய சொற்கள் தொல்காப்பியனுடைய செவியில் நன்ருக ஏறின; எல்லோருமாகக் கூடிக் குரு தேவரின் ஆசியைப்பெற்று நன்னுளில் நூல் இயற்றத் தொடங்கினர். பன்னிரண்டு பேரும் சேர்ந்து எழுது வதற்குப் பன்னிரண்டு பகுதி வேண்டுமெனக் கருதி அப் பகுதிகளை முதலில் அமைத்துக்கொண்டனர்.

உலகில் உள்ள பேறுகள் நான்கு. அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பன. வீடு என்பது மனத்திற்கும் சொல்லிற்கும் அப்பாற்பட்டது. அதைப் பற்றிச் சாதாரண மனிதர்களால் விளக்கிச் சொல்வதற்கோ விளங்கிக்கொள்வதற்கோ இயலாது. எனவே, நூல்களில் குறிப்பிடுவன அறம், பொருள், இன்பம் என்ற ஏனைய மூன்றே. தமிழ் நூலார் இன்பத்தை **அகம்** எனவும், அறத்தையும் பொருளையும் **புறம்** எனவும் குறிப்பிடுவது மரபு. புறத்தில் பெரும்பாலும் வீரமும் கொடையுமே சொல்லப்படும். வீரத்தைக் காட்டுவதற்கு வாய்ப்பு போர் நிகழ்த்தும்போதே ஏற்படுகிறது. எனவே, புறம் என்பது பெரும்பாலும் போர் நிகழ்த்தும் முறைகளைப் பற்றியே குறிப்பிடுவதாகும்.

போருக்குச் செல்லும்போது தமிழ் மக்கள் ஒவ்வொரு நிலையிலும் ஒவ்வொருவகைப் பூவைச் சூட்டிக்கொள்வது வழக்கம். அவர்கள் சூடிய பூக்களையும் மற்ற விரிவான செய்திகளையும் அடிப்படையாகக் கொண்டு 'புறம்' என்ற இலக்கணத்தைப் பன்னிரண்டு உட்பிரிவாக வகுத்துக் கொண்டு ஒவ்வொருவரும் ஒவ்வொரு உட்பிரிவை

விளக்கி வரைந்தனர். இவ்வாறு பன்னிருவரும் எழுதின தொகுப்பு நூல் "பன்னிரு படலம்" என்ற பெயரிடப் பட்டது. மாணவர் அந் நூலைக் குருதேவரின் முன்னில் கொண்டுவந்து வைத்து வணங்கினர். குருதேவர் தம் சீடர்களின் ஆற்றலை அறிந்து உள்ளூர மகிழ்ந்தார். என்றாலும், கல்விச்செருக்கு ஏற்படக்கூடாது என்பதற் காக அவர்களை அகத்தியர் வெளிப்படையாகப் புகழ வில்லை. தம்முடைய மாணவர்களைத் தாமே புகழ்வது குருதேவருக்குப் பிடிக்கவில்லை. மற்றைய புலவர்கள் இச் சீடர்களை நிச்சயம் வியந்து புகழ்வார்கள் என்று உறுதியான நம்பிக்கை அகத்தியர் பெருமானுக்கு உண்டு.

இக் கருத்து தொல்காப்பியனுக்கே நன்றாகத் தெரியும். ஏனைய மாணவர் தங்கள் செயல் குறித்து ஆசிரியர் பெருமான் மகிழ்ச்சியுற வில்லையே என்று சிறிது வருந்தினர். சில நாட்களில் வருத்தம் மாறி எல்லோரு மாகத் தாம் எழுதிய அந் நூலை விரிவாக ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்தனர். முடிவில் தொல்காப்பியன் எழுதிய வெட்சிப் படலமே மிக அழகாக அமைந்திருந்தது. மாணவ நண்பர் யாவரும் அவனைப் பெரிதும் வியந்தனர்.

## தொல்காப்பியம் இயற்றப்படுதல்

"தொல்காப்பியனே! நீ நமது ஆசிரியர் பெருமான் இயற்றியுள்ள இயற்றமிழ்ச் செய்திகளைத் தொகுத்து அழகான முறையில் வரிசைப்படுத்தி ஒரு நூல் இயற்றித் தரவேண்டும்" என்று ஏனைய மாணவர் தொல்காப்பியனை விடாப்பிடியாக வேண்டினர். தொல்காப்பியனும் உடன் பட்டான். தன் ஆசிரியர் பெருமான் இயற்றிய அகத்தி யத்தையும், ஏனைய புலவர்கள் சிலர் இயற்றிய மாபுராணம்,

பூதபுராணம் முதலிய நூல்களையும் பன்முறை ஒப்பிட்டு நோக்கி மனத்தில் அமைத்துக்கொண்டான்; இயற்றமிழ் இலக்கணத்தை எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று பெரும் பிரிவாக வகுத்துக்கொண்டான். பெரும் பிரிவுக்கு அதிகாரம் என்று பெயரிட்டான். ஒவ்வோர் அதிகாரத் துக்கும் ஒன்பது உட்பிரிவுகள் அமைத்தான். அவை பெரும்பாலும் இயல் என்று பெயரிடப்பட்டன. எழுத் ததிகாரத்தில் எழுத்துக்கள் கூடிச் சொல்லாகும் முறையை யும், புணர்ச்சி இலக்கணத்தையும் விளக்கிக் கூறினன். சொல்லதிகாரத்தில் தொடர்மொழி இலக்கணத்தையும், ஒருமொழி இலக்கணத்தையும், எஞ்சிய சொல்லிலக் கணங்களையும் விளக்கி உரைத்தான். பொருள் அதிகாரத்தில் அகப்பொருளைப்பற்றி விரிவாகவும், புறப் பொருளைப்பற்றிச் சுருக்கமாகவும் குறிப்பிட்டான். மெய்ப் பாடுகளையும் உவமத்தையும் ஓரளவு விளக்கிக் கூறினன். செய்யுள் இலக்கணத்தை விரிவாக உரைத்து, இறுதியாக உலக மரபையும் இலக்கண மரபையும் குறிப்பிட்டு நூலை முடித்தான். அந் நூலே தொல்காப்பியமாகும். அஃது சுமார் ஆயிரத்தறுனூறு நூற்பாக்களைக் கொண்டது; ஏனைய நூல்களைவிட மிக அழகான முறையில் அமைந்திருந்தது.

தொல்காப்பியன் எழுதிய நூலை அவனுடைய நண்பர்கள் படித்துப் படித்து மகிழ்ச்சி யடைந்தனர்; அந் நூலை அகத்தியரிடம் காட்டுமாறு அவனிடம் பலகாலும் கூறி வற்புறுத்தினர். ஆனல் அவன் தனது திறமையை வெளிப்படுத்துவதற்கு வெட்கப்பட்டு ஆசிரி யரிடம் சில நாட்கள் வரை தன் நூலைக் காட்டாமல் இருந்தான்; நண்பர்கள் அவனது செயலை ஆசிரியர்

பெருமானிடம் குறிப்பிட்டனர். தொல்காப்பியன் இயற்றிய இலக்கண நூல் ஆசிரியரின் முன்னிலையில் கொண்டு வைக்கப்பட்டது. ஆசிரியர் நூலை ஆங்காங்கு பார்த்து மனத்துக்குள் மகிழ்ந்தார்; வாய் திறந்து ஒன்றும் சொல்லவில்லை. "இந் நூலை மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றுங்கள்" என்று அவர் சொல்லியருளினர். மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் அகத்தியனர். அவருடைய சீடன் இயற்றிய நூல் அவரைத் தலைவராகக் கொண்ட தமிழ்ச் சங்கத்தில் அரங்கேறப் போகிறது என்று நினைத்துச் சீடர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

## தொல்காப்பியன் மதுரை சேர்தல்

தமது பணிவிடைக்கு அதங்கோட்டாசிரியனை வைத்துக்கொண்டு ஏனைய பதின்மருக்கும் தொல்காப்பியனுடன் மதுரைக்குச் செல்வதற்கு அகத்திய முனிவர் அனுமதியளித்தார். குருவும் தன் நண்பன் அதங்கோட்டாசிரியனும் வராமைக்கு வருந்தித் தொல்காப்பியன் தனது எண்ணத்தைக் குறிப்பால் உணர்த்தியவாறு அருகில் நின்றான். அவனது எண்ணத்தை அறிந்த அகத்தியர் "நீ கவலைப்படாமல் செல். எல்லாம் முறைப்படி நடக்கும்" என்று சொல்லியனுப்பினர். தொல்காப்பியன் குருபத்தினியையும் வணங்கி அவளிடமும் ஆசி பெற்று, மறுபடியும் அதங்கோட்டாசிரியனைத் தனியே சந்தித்தான். "நீங்கள் கட்டாயமாக குருவை அழைத்துக்கொண்டு வரவேண்டும். நீங்கள் இல்லாவிட்டால் நான் நூலை நன்றாக அரங்கேற்றமுடியாது" என்று வேண்டினன் தொல்காப்பியன். ஆசிரியரை வேண்டி

அவரையும் அழைத்துக்கொண்டு தான் உரிய காலத்தில் வந்து சேர்வதாக அதங்கோட்டாசிரியன் கூறித் தொல்காப்பியனை வழியனுப்பினான்.

அப்பொழுது பாண்டிய நாட்டை ஆண்டுவந்த மன்னன் நிலந்தரு திருவிற்பாண்டியன் என்ற மாகீர்த்தி யாவான். அவன் தமிழ்ப் புலமை நிரம்ப வாய்ந்தவன்; புலவர் பாடும் புகழுடையவன். தமிழ் மொழியையும் தமிழ்ப் புலவரையும் தன் உயிரேபோல் கருதுபவன். அவனுக்கு ஓலையில் எழுதிய கடிதம் ஒன்றைத் தம் முடைய சீடர்கள் மூலம் அகத்தியர் கொடுத்தனுப்பினார்.

முன்னராக மதுரை சேர்ந்த சீடர்கள் பாண்டியன் மாகீர்த்தியைக் கண்டு அகத்தியர் கொடுத்தனுப்பிய திருமுகத்தை அவனிடம் அளித்தனர். அரசன் தன் அவையில், அகத்தியரின் முதல் மாணவன் தொல்காப்பியன் தான் இயற்றிய இயற்றமிழ் நூலை அரங்கேற்ற வரும் செய்தியைக் கேட்டு மட்டிலா மகிழ்ச்சிகொண்டான். இதற்கிடையில் தொல்காப்பியனும் அங்கு வந்து சேர்ந்தான். அரசன் சங்கப் புலவர்கள் யெல்லோரையும் அழைத்துத் தொல்காப்பியனது வருகையையும் அகத்தியரின் கடிதச் செய்தியையும் தெரிவித்தான். எல்லோரும் மிகவும் மகிழ்வுற்றனர்; பேரகத்தியம் படித்த தமக்குத் தொல்காப்பியன் புதிதாக வழங்கப்போகும் நூல் எவ்வாறிருக்குமோ என்றெல்லாம் எண்ணமிட்டனர். எல்லோருமாகச் சேர்ந்து ஒரு நல்ல நாள் பார்த்து அந் நாளில் நூலை அரங்கேற்றுவது என்று முடிவுசெய்தனர். மன்னன் தொல்காப்பியனைச் சிறப்பாக வரவேற்று, அகத்தியர் எப்போது வருவார் என்று வினவினான்.

அவரை அழைத்துக்கொண்டு தன் நண்பர் அதங்கோட்டாசிரியர் விரைவில் வருவதாக உறுதிகூறிய செய்தியைத் தொல்காப்பியன் வேந்தனுக்குத் தெரிவித்தான்.

## அதங்கோட்டாசிரியரைமட்டும் அகத்தியர் அனுப்புதல்

ஆச்சிரமத்தில், தியானத்திலீடுபட்டிருந்த அகத்தியர் மாலையில் கண்ணைத் திறந்தார். பக்கத்தில் அதங் கோட்டாசிரியர் கைகட்டி நின்றுகொண்டிருந்தார். "குருதேவா!" என்றார். அதற்குமேல் உரைக்க அவருடைய நா எழவில்லை. முனிபுங்கவருக்கு அதங் கோட்டாசிரியரின் இந்தச் செயல் புதுமையாக இருந்தது. அவர் அவனை நோக்கி, "தயக்கம் என்ன! சொல் விரைவில்" என்றார்.

"குருதேவரே! நம் தொல்காப்பியன் தன் நூலை அரங்கேற்றும் தருணத்தில் தாங்கள் இங்கு இருக்கலாமா? அரங்கேற்றத்தைக் காணத் தமிழ்ச் சங்கத் தலைவராய்த் தாங்கள் வீற்றிருக்கக் கூடாதா? தொல்காப்பியனை அங்கு அனுப்பிவிட்டுத் தாங்கள் இங்கு இருப்பது எனக்கு வருத்தமாக இருக்கிறது. என் மனத்தில் இருப்பதைச் சொல்லிவிட்டேன். மன்னிக்கவேண்டும்" என்று அதங்கோட்டாசிரியர் விநயத்துடன் நவின்று நின்றார்.

சில நிமிடங்கள் முனிவர் மௌனமாக இருந்தார். அவரது முகத்தில் என்றும் இல்லாத ஒரு பேரொளி தோன்றியது. உதட்டில் புன்முறுவல் பூத்தது. இறைவனைத் துதிசெய்த பிறகு அவர், "மாணவனே!

தொல்காப்பியனைப்பற்றி நீங்கள் அறிந்திருப்பதைவிட நான் அதிகம் அறிவேன். அவன் அறிவில் எனக்கு ஈடானவன் என்பது நன்கு விளங்கிய உண்மையாகும்; அவன் இயற்றியுள்ள இலக்கண நூல் யான் இயற்றிய நூலைவிடப் பல படியும் மேம்பட்டு விளங்குகிறது. ஆனால் நான் மதுரைக்கு வந்து தலைமை வகித்தால் அவனது நூலின் உண்மைச் சிறப்பை ஏனைய புலவர்கள் உள்ளபடி கூற முன்வரமாட்டார்கள். என் மாணவன் பெரும் புகழ் பெறவேண்டும் என்பதே எனது ஆவல். ஆதலின் நான் அங்குவர விரும்பவில்லை. எனது மனமார்ந்த நல்லாசி அவனுக்கு உரியதே. நான் வரவில்லையே என்று நீ வருந்தாதே. நீ கட்டாயமாக அரங்கேற்றத்துக்கு நாளைக் காலையே புறப்படு. தொல் காப்பியனுக்கு அடுத்த பெரும் புலமை உனக்கே உண்டு. மேலும், நீ நான்கு வேதங்களையும் நன்கு கற்றவன். வேதத்தை உணர்ந்து படித்தவனுக்கு உலகியல் அறிவு மிகுதியாக இருக்கும். ஆதலின் நீ சங்கத்துக்குச் சென்று தொல்காப்பியன் நூலை அரங்கேற்றும்போது பக்கத்தி லிருந்து நன்றாகக் கவனி. மற்றவர்களுக்கு எந்த எந்த இடங்களில் ஐயப்பாடுகள் தோன்றுமோ அந்த இடங்களி லெல்லாம் அவ்வையங்களை எழுப்பித் தொல்காப்பியனை அவற்றை உலகம் அறிய விளக்கிக் கூறுமாறு செய். அப்போது அவையோர் உன்னை வீண் வாதம் புரிகின்றான் என்று நினைத்தாலும் பரவாயில்லை. தொல்காப்பிய னுடைய அறிவை எந்த எந்த விதத்தில் புலவர்களுக்கு வெளிப்படுத்த இயலுமோ அந்த அந்த வகைகளை யெல்லாம் நீ மறைமுகமாகக் கையாளவேண்டும். இதுவே நீ அவனுக்குச் செய்யக் கூடிய நன்றியாகும்.

"மேலும், நூலின் அரங்கேற்றம் முடிந்தவுடன் நூலுக்குச் சிறப்புப்பாயிரம் வேண்டுமே. அதற்கு என்னிடம் வருதல் தகாது. நான் எழுதியளித்தால் அகத்தியன் தன் சீடனை வானளாவப் புகழ்ந்து விட்டான் என்று சிலர் கருதுதல் கூடும். பனம்பாரன் சீரிய திறமை வாய்ந்தவன். என்னுடைய ஆணையை அவனிடம் கூறி அவனைச் சிறப்புப்பாயிரம் எழுதித் தரச்செய். அரங்கேற்ற மானதும் தொல்காப்பியனுடைய நூலுக்குத் தொல்காப் பியம் என்ற பெயரை இடுக. நீ விரைவில் சங்கத்துக்குப் போய்ச் சேர்" என்று அகத்தியர் கூறி முடித்தார்.

## அதங்கோட்டாசிரியர் சங்கத்தை அடைதல்

குரு பத்தினியை வணங்கி அவளிடம் ஆசிபெற்று அதங்கோட்டாசிரியர் மதுரையை நோக்கிப் புறப் பட்டார்; விரைவாகச் சென்று சங்கத்தை அடைந்தார். அன்றே தொல்காப்பியன் தான் இயற்றிய இலக்கண நூலை அரங்கேற்றும் நாள். காலையிலிருந்து அரங்கேற்றம் நிகழவேண்டும் என்று முன்னேற்பாடு செய்யப் பட்டிருந்தது.

முதல் நாள் இரவு நீண்ட நேரம் வரையில் தொல்காப்பியன் குருநாதர் வரவையும் அதங்கோட்டா சிரியர் வரவையும் எதிர்பார்த்துக்கொண்டு வழிமேல் விழிவைத்து உட்கார்ந்திருந்தான்; இறுதியில் ஏமாற்றத் தோடு கண்ணுறங்கினான். வழக்கம்போல வைகறையில் எழுந்து காலைக் கடன்களை முடித்துக்கொண்டு, குரு நாதனை மனம், மொழி, மெய்கள் ஒன்றித் தியானஞ் செய்தான். அதற்குள் அவனுடைய நண்பர் பதின்மரும் அரங்கேற்றும் அவைக்குச் செல்லும் பொருட்டுத்

தயாராய் அவனை வந்து அடைந்தனர். அவர்களைக் கண்டதால் தொல்காப்பியனுக்கு எவ்வித உற்சாகமும் உண்டாகவில்லை. 'நம் குருநாதர் வராமல் இருந்து விட்டாரே; அதங்கோட்டாசிரியரையும் அனுப்ப வில்லையே' என்ற வருத்தமே தொல்காப்பியனுக்கு மேலிட்டிருந்தது.

திடீரென்று நண்பர்களெல்லோரும் ஆரவாரித்தனர். தொலைவில் அதங்கோட்டாசிரியர் விரைந்து வந்துகொண் டிருந்தார். தொல்காப்பியனும் அவரைக் கண்டான்; சற்றுக் கூர்ந்து நோக்கினான். குரு தேவரும் வருகிறாரா என்று காணவேண்டும் என்பது அவனது ஆவல். ஆனால் அதங்கோட்டாசிரியர் நெருங்கிவந்துவிட்டார். குரு தேவர் கண்ணுக்கு எட்டியவரை காணப்படவில்லை. ஆதலின் குரு தேவர் வரவில்லை என்று தொல்காப்பியன் தெரிந்துகொண்டான்; அதங்கோட்டாசிரியராவது வந்தாரே என்பது குறித்து உளம் மகிழ்ந்தான். அதங் கோட்டாசிரியர் வந்ததும் அவர் தொல்காப்பியனைத் தழுவிக்கொண்டார். ஆசிரியர் வரவில்லையா யென்று தொல்காப்பியன் வினவினான். "ஆசிரியர் என்னையே அனுப்பினார். அதற்கு உரிய காரணங்களையும் விரிவாகக் கூறினார். உடன் இருந்து அரங்கேற்றத்தை நன்கு நிறைவேற்றுமாறு என்னைக் கட்டளையிட்டு அனுப்பினார்" என்றார் அதங்கோட்டாசிரியர்.

## தொல்காப்பிய நூலின் அரங்கேற்றம்

எல்லோரும் சங்கம் இருந்த மன்றத்தை அடைந்த னர். சங்கத் தலைவருக்குத் தனி இருக்கை சிறப்பாக அமைக்கப்பட்டிருந்தது. அதன் வலப்புறத்தில் தொல்

காப்பியனுடைய ஆசனம் இருந்தது. இடப் புறத்திலும் அதைப் போன்ற ஓர் ஆசனம் அமைக்கப்பட்டிருந்தது. சங்கத் தலைவர் அகத்தியர் வராத காரணத்தால் புலவர்கள் எல்லோரும் பாண்டியன் மாகீர்த்தியைத் தலைமை தாங்கு மாறு வேண்டினர். அவனும் புலவர்களுடைய சொல்லைத் தட்ட மனமில்லாமல் அகத்தியரை மனத்தால் இறைஞ்சி, தலைமையை ஏற்று நடு ஆசனத்தில் நடு நாயகமாக வீற்றிருந்தான். வலப்புறம் இருந்த ஆசனத் தில் எல்லோரும் தொல்காப்பியனை அமரச் செய்தனர். இடப்புறம் இருந்த ஆசனத்தில் யார் அமருவது என்பது பற்றி ஐயம் எழுந்தது, குழுமியிருந்த புலவர் எவரும் நேரே வந்து அதில் அமருவதற்குத் துணிவு கொள்ள வில்லை. 'மற்றவர் என்ன நினைப்பாரோ' என்று ஒவ் வொருவரும் ஏனையவரைப் பார்த்த வண்ணம் சில நிமிடங் கள் இருந்தனர். "குருதேவர் என்னிடம் நேரில் அருளிய வாறு அந்தத் தவிசில் நான் அமருவதை அனுமதியுங்கள்" என்று சொல்லி அதங்கோட்டாசிரியர் இடப்புற ஆசனத் தில் வந்து அமர்ந்தனர்.

தொல்காப்பியர் தமது நூலை அரங்கேற்ற ஆரம்பித் தார். இடை இடையே அதங்கோட்டாசிரியர் சரமாரி யாகக் கேள்விகளைத் தொடுத்தனர். "இருவருக்கும் மனத்தாங்கலோ! ஏன் இவ்வாறு அதங்கோட்டாசிரியர் தொல்காப்பியரை முன்னேற விடாது கேள்விமேல் கேள்வியாக அடுக்கிக் கொண்டே போகிறார்" என்று அவையோர் வியந்து கவனித்துக்கொண்டிருந்தனர்.

அதங்கோட்டாசிரியர் விடுத்த வினாக்களுக் கெல்லாம் தொல்காப்பியர் மிக்க அமைதியாக விடையளித்தார்.

அதங்கோட்டாசிரியர் தமது வடமொழிப் புலமையையும் மறை நூல் அறிவையும் புலப்படுத்திப் பலவாறுக வினு வினர். ஆனல் தொல்காப்பியர் அக் கேள்விகளுக் கெல்லாம் விடையாகத் தமது நூலிலுள்ள சூத்திரங்களை எடுத்துக் காட்டினர். அவையினர் அனைவரும் தொல் காப்பியரை வியந்தனர். நூல் அரங்கேற்றம் நிறை வேறியதும் பாண்டியன் மாகீர்த்தி தொல்காப்பியர் வரைந்த நூலுக்கு அகத்தியரின் கருத்துப்படி **தொல் காப்பியம்** என்று பெயர் சூட்டினுன்.

## தொல்காப்பியப் பாயிரம்

அதங்கோட்டாசிரியர் தமது இருப்பிடத்தினின்று எழுந்து வந்து மற்ற நண்பர்களுக்கு இடையில் பனம் பாரனுரின் பக்கத்தில் அமர்ந்தார். அவருடைய செவி களில் ஏதோ இரகசியமாய்ப் பேசினுர். முதலில் அவர் தம்மால் இயலாதென்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தார், மறுபடியும் அதங்கோட்டாசிரியர் வற்புறுத்தியதன் காரணமாக, அவர் சொல்லை மறுக்க முடியாமல் ஒரு நிமிடம் தலையைக் குனிந்து கொண்டு உட்கார்ந்திருந்தார். பிறகு அவர் வெளியே சென்றுர்; ஐந்து நிமிடங்களில் ஏடு எழுத்தாணியோடு அவைக்குத் திரும்பினுர். அவருடைய முகம் தெளிவு பெற்று இருந்தது. அவர் தாம் கொண்டுவந்த ஏட்டில் தொல்காப்பியத்துக்குச் சிறப்புப்பாயிரம் எழுதியிருந்தார்.

ஒவ்வொரு நூலுக்கும் சிறப்புப்பாயிரம் முக்கிய மாகும். மாடத்துக்குச் சித்திரங்களைப் போலவும், மாநகருக்குக் கோபுரத்தைப் போலவும், பெண்களுக்கு அணிகலன்களைப் போலவும், பாயிரம் நூலுக்கு அழகு

செய்கிறது. மேலும், கரு அமைந்த மாநகருக்கு உருவமைந்த வாயில் மாடம் போலவும், அளப்பரிய ஆகாயத்துக்கு விளக்கமாகிய திங்களும் ஞாயிறும் போலவும், தகை மாண்ட நெடுஞ்சுவருக்கு வகை மாண்ட ஓவியம் போலவும், கற்புடைய நங்கைக்குப் பொற்புடைய கணவன் போலவும் நூலுக்குப் பாயிரம் இன்றியமையாதது.

பாயிரம் பொதுப்பாயிரம் சிறப்புப்பாயிரம் என்று இருவகைப்படும். பொதுப்பாயிரம் எல்லா நூலுக்கும் பொதுவான செய்தியைச் சொல்லுவது. ஆசிரியனுடைய தன்மை, அவன் பாடம் சொல்லிக் கொடுக்கும் முறை, மாணவனுடைய தன்மை, அவன் பாடம் கேட்கும் முறை இவற்றைத் தெரிவிப்பது பொதுப்பாயிரம் ஆகும். நூல் இயற்றியவனுடைய வரலாறு, அரங்கேற்றப்பட்ட விவரங்கள் முதலிய செய்திகள் சிறப்புப்பாயிரத்தில் குறிப்பிடப்படும். பொதுப்பாயிரத்தைவிட சிறப்புப் பாயிரமே முக்கியமானது. தொல்காப்பியத்துக்கு ஓர் அருமையான சிறப்புப்பாயிரம் இயற்றிப் பனம்பாரனர் அதைப் புலவர்கள் முன்னிலையில் படித்து விளக்கித் தொல்காப்பியரிடம் கொடுத்தார். தொல்காப்பியர் அதை வணக்கத்துடன் வாங்கித் தம் தொல்காப்பியச் சுவடியின் முதல் ஏடாக இணைத்துக்கொண்டார்.

வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து,
வழக்குஞ்செய்யுளு மாயிருமுதலின்
எழுத்தும் சொல்லும் பொருளும் நாடிச்
செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தோடு
முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப்
புலந்தொகுத் தோனே போக்கறு பனுவல்

நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து
அறங்கரை நாவின் நான்மறை முற்றிய
அதங்கோட் டாசாற் கரில்தபத் தெரித்து
மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி
மல்குநீர் வரைப்பில் ஐந்திரம் நிறைந்த
தொல்காப் பியனெனத் தன்பெயர் தோற்றிப்
பல்புகழ் நிறுத்த படிமை யோனே.

சிறப்புப்பாயிரத்திற்குரிய பதினெரு செய்திகளும் இப் பாட்டில் காணப்பட்டன. "தொல்காப்பியர் ஜமதக்னி முனிவரின் புதல்வர்; திருணதுமாக்னி என்ற இயற்பெயரை உடையவர். அவர் பிறந்த குடி காவிய குடி; அது பழம் பெருமை வாய்ந்தது. பழம் பெருமை வாய்ந்த காவிய குடிக்குத் திருணதுமாக்னி சிறப்புத் தந்தமையால் அவருடைய இயற்பெயர் மறைந்து போய் அவருக்குத் தொல்காப்பியர் என்பதே பெயராக ஏற்பட்டது. அத்தகைய தொல்காப்பியர் வடமொழிப் புலமை நிரம்பியவர். தூய தவவொழுக்கம் உடையவர். அவர் அகத்தியத்தில் கலந்துகிடந்த இயற்றமிழ்ப் பகுதியை வரிசைப்படுத்தி எளிமையாக விளங்கவைப்பதற்கே நூல் இயற்றினர். அது சிறிதும் குற்றம் இல்லாத நூல். அந் நூல் பாண்டியன் மாகீர்த்தியின் அவையிலேயே அரங்கேறியது. நேர்மையையே வாழ்க்கை நெறியாகக் கொண்ட அதங்கோட்டாசிரியர், நூல் அரங்கேறிய காலத்தில் பல வினக்களைத் தொடுத்தனர். நான்கு மறைகளையும் ஓதி உணர்ந்த அந்த அறிஞருடைய வினக்களுக்கு விடை கூறும்போது ஐயந்திரிபுகள் எல்லாம் நீங்கத் தொல்காப்பியர் தமது நூற்பொருளை விளக்கிக் காட்டினர். தொல்காப்பியர் இயற்றிய நூல் அவருடைய பெயரால் தொல்காப்பியம் என்று வழங்கலாயிற்று. இந்

நூலை அமைப்பதற்குத் தொல்காப்பியர் தமிழ்ப் பெரும் புலவரது நூல்களை மட்டும் ஆதாரமாகக் கொள்ளாமல் தமிழ் நாட்டு உலக வழக்கையும் எடுத்துக்கொண்டு இரண்டையுமே ஆதாரமாகக் கொண்டார்'' என்பனவே அச் சிறப்புப்பாயிரத்தில் சொல்லப்பட்டனவாகும்.

தொல்காப்பியரையும், அவருடைய குருவாகிய அகத்தியரையும் போற்றாத புலவர் இல்லை. தொல்காப்பியத்தைச் சங்கப் புலவர்கள் பிரதி செய்துகொண்டனர். தொல்காப்பியத்திலுள்ள சொல்லழகைச் சிலர் புகழ்ந்தனர்; பொருளழகைப் பலர் வியந்தனர்.

## குருவும் சீடனும்

அரசனிடமும் புலவர்களிடமும் விடைபெற்றுக் கொண்ட தொல்காப்பியர் தம் நண்பர் பதினொரு வருடனும் பொதிய மலைக்கு விரைந்து திரும்பி அரங் கேற்றப்பட்ட தொல்காப்பிய நூலைத் தம் குருதேவரின் திருவடிகளிலும் குருபத்தினியின் திருவடிகளிலும் வைத்து வணங்கிக் கைகட்டி வாய்புதைத்து நின்றார். அகத்தியர் தொல்காப்பியச் சுவடியை எடுத்துத் தொல்காப்பியர் நீங்கலாக ஏனைய சீடர்களிடம் பொது வாகக் கொடுத்தார். அவர்கள் முன்னிலையில் பின்வரு மாறு அம் முனிவர் சொல்வாராயினர்:

''மாணவர்களே! தமிழுக்காக நான் செய்ய விரும்பிய தொண்டுகள் இரண்டு. முதலாவது அதற்கு ஒரு பெரிய இலக்கண நூல் செய்தல்; இரண்டாவது ஓர் உத்தம சீடனைத் தயாரித்தல். இவற்றுள் இலக்கண நூலை முதலிலேயே அமைத்துவிட்டேன். உத்தம சீடனைத்

தொல்காப்பியனிடம் கண்டேன். அவனது வெட்சிப் படலத்தைக் கண்டதுமே அவனது பேரறிவை அறிந்து மகிழ்ந்தேன். தொல்காப்பியனது இயற்றமிழ் இலக்கணம் எனது மகிழ்ச்சியை எல்லேமீறச் செய்தது. அவனுடைய பெருமையைச் சங்கம் அறிவதற்காகவே அவனேத் தனியே மதுரைக்கு அனுப்பினேன். மேலும் அவனுடைய நுண்ணறிவை வெளிப்படுத்தும் பொருட்டு அதங்கோட்டாசிரியனேக் கொண்டு பற்பல கேள்வி கேட்டுத் தொல்காப்பியன் கூறும் மறுமொழியைப் புலவர் கூட்டத்துக்கு அறிவிக்கச்செய்தேன். சங்கம் தொல்காப்பியத்தின் பெருமையை உணர்ந்தது. என் கடமை முடிந்துவிட்டது. இனி இந் நூலே வைத்துத் தமிழ் ஆராய்ச்சி செய்யுங்கள். உமக்கு அகத்தியமே வேண்டாம். இனித் தோன்றும் தமிழ் மக்கள் எளிமையையே விரும்புவர். அவர்கள் அகத்தியத்தை மறந்துவிடுவர். அகத்தியனேத் தொல்காப்பியனின் குரு என்ற அளவில்தான் நினேவிற்கொள்வர். நீங்கள் நும் சொந்த ஊர்களுக்குச் சென்று தமிழ் ஆராய்ச்சி செய்யுங்கள்.''

தொல்காப்பியரை ஆசீர்வதித்து, ''முனிகுமாரா! உன் தமிழ்ப்பணி நிறைவேறியது. இனி தவத்திலேயே காலத்தைச் செலவிட்டு வானேர்க்குயர்ந்த உலகத்தை அடைவதற்கு ஆவன செய்'' என்ருர். தொல்காப்பிய முனிவர் மாபெரும் தவம்செய்து பெறலரும் பரிசில் பெற்ருர்.

## 2. இறையனார்

சேர, சோழ, பாண்டியர் மூவரும் தமிழ்ப் பெரு மன்னர்கள் என்றாலும் தமிழ் வளர்த்த பெருமை பெரும்பாலும் பாண்டியர்களையே சாரும். பாண்டியர் களே தமிழ்ச் சங்கங்களை நெடுநாட்கள் புரந்து வந்தனர். முதற் சங்கம், இடைச் சங்கம், கடைச் சங்கம் என்ற மூன்றும் பாண்டியர்களது ஆதரவில் நடைபெற்றன. முதற் சங்கத்தின் இலக்கண நூல் அகத்தியமாகும். இடைச் சங்கத்துக்கு அகத்தியமும் தொல்காப்பியமும் இலக்கண நூல்களாக அமைந்தன. இடைச் சங்கத்தில் தொல்காப்பியம் அரங்கேற்றமான சில ஆண்டுகளுக்குள் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் அதன் அழகு புலவர் களது மனத்தைக் கவர்ந்தது. அகத்தியம் படிக்கும் புலவரது எண்ணிக்கை வரவரக் குறைய ஆரம்பித்தது. எல்லோரும் தொல்காப்பியத்தையே ஐயந்திரிபற மனப் பாடம் செய்து கொண்டனர். கடைச் சங்கம் ஏற்பட்டதும் அகத்தியத்தை புறக்கணித்துத் தொல்காப் பியத்தையே தங்களது இலக்கண நூலாகப் புலவர்கள் கொண்டனர். இதனால் அகத்தியம் கடைச் சங்க காலத்தி லேயே வழக்காறு அற்றது. அகத்திய சூத்திரங்களாக இப்போது மிகச்சிலவே அறியப்படுகின்றன; அவைகள் பெரும்பாலும் தொல்காப்பியத்தில் மேற்கோள்களாக அமைந்தனவாகும்.

### உக்கிரப் பெருவழுதியின் ஆட்சி

பாண்டிய மன்னர்கள் தமிழ்ப் புரவலர்களாக இருந்தமையோடு அவர்களில் பலர் தமிழ்ப் புலவர் களாகவும் இருந்தனர். அத்தகைய சிறந்த மன்னர்களில்

**உக்கிரப் பெருவழுதியும்** ஒருவன். அவனுடைய சங்கத்தில் தமிழ்ப் பெரும் புலவர்கள் பலர் இருந்தனர். நாடோறும் தமிழ் ஆராய்ச்சி விரிவாக நடைபெற்றது. அரசனும் அவ்வப்போது புலவர்களுடன் அமர்ந்து அவர்களுக்கு உற்சாகம் அளித்து வந்தான்.

இவ்வாறு இருக்கையில் நாட்டில் இரண்டு ஆண்டுகள் சேர்ந்தாற்போல் மழை பெய்யவில்லை. விளைவு குன்றிவிட்டது. "மாரியல்லது காரியமில்லை" அன்றோ? மக்கள் பசியால் வாட ஆரம்பித்தனர். மக்களின் துயரைக் கண்டு மன்னன் மிகவும் வருந்தினன். சிறந்த வானநூல் வல்லுநர்களை வரவழைத்தான். கோள்களின் நிலையை ஆராய்ந்து சொல்லுமாறு வேண்டினன். அவர்கள் வானத்தை நன்கு நோக்கினர்கள். மிக வருத்தத்துடன், அரசனைப் பார்த்து "அரசே! வெள்ளியாகிய கிருகம் தென்திசை நோக்கிச் சென்று விட்டது. அது பழையபடி வடக்கு நோக்கி வர இன்னும் பத்து ஆண்டுகள் ஆகும். வெள்ளி தெற்கே சென்றல் பன்னிரண்டு ஆண்டுகள் மழை பெய்யாது. இன்னும் பத்து ஆண்டுகள் நாடு பஞ்சத்தால் வாடவேண்டியது தான்" என்று சோதிடர் நவின்றனர்.

### நாட்டில் பஞ்சம்

அரசன் செய்வது அறியாது வருந்தினன். மக்களுக்குப் பறை சாற்றிக் கோள் நிலையைத் தெரிவித்து அவர்களை வெளிநாடு சென்றுவது பத்து ஆண்டுகளைக் கழிக்குமாறு செய்தி யனுப்பினன். மக்களில் பெரும்பாலோர் உயிர் பிழைப்பதற்காக நாட்டையும் வீட்டையும் துறந்து சேர, சோழ நாடுகள் நோக்கிக் கிளம்பினர். நாட்டுப்

பற்று மிகவுடைய மக்கள் சிலர் உயிர் போவதாயினும் எமது ஊரைவிட்டு நீங்க மாட்டோம் என்ற உறுதியுடன் மதுரையிலேயே தங்கினர். மக்களில் பெரும்பாலோர் ஊரைவிட்டு நீங்கவே அரசனுடைய வருவாய் குறையலாயிற்று. வருவாய் இன்றேல் அரசன் தன்னுடைய செலவினங்களை எங்ஙனம் கவனிப்பது ?

## அரசனும் புலவர்களும்

வருவாய் குறைந்ததினால் புலவர் பெருமக்களை அரசன் ஆதரிக்க இயலவில்லை. இதற்குமுன்பெல்லாம் வேண்டிய பொருள்களை விரும்பியபடி கொடுத்த வேந்தன் இப்பொழுது அவர்களுக்கு அறுசுவை உண்டி அளிப்பதற்கே முடியாதவனாக இருந்தான். அவர்களையும் தன்னோடு வைத்துக்கொண்டு அல்லற் படுத்துவதற்கு உக்கிரப்பெருவழுதியின் மனம் இடந்தரவில்லை. ஆதலின் ஒரு நாள் புலவர்கள் எல்லோரையும் அழைத்தான். "புலவர் பெருமக்களே! என் மூதாதையர் யாவரும் தமிழைத் தமது உயிரினும் மேம்பட்டதாகக் கருதினர். தமிழ்ப் புலவர்களை ஆதரிப்பதையே தமது முதல் கடமையாகக் கொண்டனர். அவர்களது பரம்பரையில் தோன்றிய நான் அவர்களது ஆசியால் இன்று வரை உங்களை இயன்றளவு சிறப்பாக ஆதரித்து வந்தேன். ஆனால் நாட்டிலோ பன்னீராண்டுப் பஞ்சம் தலைவிரித்து ஆடுகிறது. இந் நிலையில் உங்களையும் என்னுடன் வைத்துக்கொண்டு துயருறச்செய்ய என் மனம் பொறுக்கவில்லை. நீங்கள் சேர நாட்டிலும் சோழ நாட்டிலும் உள்ள உறவினர்களையும் வள்ளல்களையும் அடுத்து வாழ்ந்துவாருங்கள். பாண்டிய நாட்டில் மழைபெய்து அது பழையபடி செழிப்பு அடைந்தவுடன் என்னை

நினைத்துக்கொண்டு திரும்புங்கள். சில மாதங்களுக்கு முன்பே உங்களிடம் தெரிவிக்கவேண்டிய இந்தச் செய்தியை மனம் தாளாமையால், இவ்வளவு காலம் தாமதம் செய்தேன்'' என்று பெருவழுதி வருத்தத்துடன் கூறினான்.

புலவர்கள் மன்னனை நோக்கி, ''அரசே! உன்னுடைய இன்ப துன்பங்களை நாங்கள் எங்களுடையன வாகவே கருதுகிறோம். என்று வானநூல் அறிஞர், பாண்டிய நாட்டில் பன்னீராண்டுப் பஞ்சம் ஏற்படும் என்று குறிப்பிட்டனரோ, அன்றே இத்தகைய நெருக்கடியான காலத்தில் உனக்கு அதிகமான பொறுப்பைக் கொடுக்கக்கூடாது என்ற நோக்கத்துடன் நாங்கள் வேறு நாடுகளுக்குச் செல்லத் தீர்மானித்தோம். அதை உன்னிடம் தெரிவித்தால் நீ எங்களது பிரிவுக்கு வருந்துவாயே என்று கருதி மனத்திலேயே அந்த எண்ணத்தை வைத்துக் கொண்டிருந்தோம். இன்று இறைவன் உன் மனத்தில் புகுந்து உன் மூலமே எங்களுக்கு எங்கள் விருப்பத்தைச் செய்யும் வாய்ப்பை யளித்துவிட்டான். நாங்கள் எங்குச் சென்றாலும் உனது புகழைச் சொல்லிக்கொண்டே இருப்போம். நீ அளித்த உணவினால் வளர்ந்த எமது உடலில் உயிருள்ளவரை நீ செய்த நன்றியை மறவோம். ஆதலின் அரசே! எங்களுக்கு விடைகொடு. நாங்கள் பாண்டிய நாடு செழிப்படைந்த பிறகு மீளுவோம்'' என்று மொழிந்தனர்.

அரசனும் புலவர்களுடன் ஊர் எல்லை வரையில் நடந்து சென்று அவர்களை வழியனுப்பி அவர்களிடம் பிரியாவிடைகொண்டு அரண்மனைக்குத் திரும்பினான்.

## மழைபெய்தமையும் புலவர் வருகையும்

பன்னீராண்டுகள் முடிந்ததும் நல்ல மழை பெய்தது. தாய்ப் பசுவைக் கண்ட கன்றுகளைப் போல மழை நீரைக் கண்ட மக்கள் விளை நிலங்களுக்கு விரைந்து சென்றனர். புது ஊக்கத்துடன் ஆழமாக உழுதனர்; வெளி நாடுகளுக்கு ஓடோடியும் சென்று விதைகளைக் கடனாக வாங்கி வந்து தெளித்தனர். நீண்ட காலமாகத் தரிசாகக் கிடந்த நிலத்தில் சத்து மிகுதியாக இருந்தது. ஆதலின், அந்த ஆண்டில் இதற்குமுன் என்றும் கண்டிராத அளவு தானியங்கள் விளைந்தன. எல்லா மக்களும் பழைய உற்சாகத்தை மீளவும் பெற்றனர். வெளிநாடுகளுக்குச் சென்றிருந்த உறவினர் யாவரும் மதுரைக்கு வந்து சேர்ந்தனர்.

அரசனது அரண்மனை பழையபடி சிறப்படைந்தது. மன்னனுக்குப் புலவர்களை அழைத்து வரவேண்டும் என்ற எண்ணம் தோன்றிற்று. தன் ஏவலாட்கள் ஆயிரவரை வரவழைத்தான். அவர்களிடம் போதிய பொருள் கொடுத்து எண்திசைகளுக்கும் சென்று அங்குள்ள தமிழ்ப் புலவர்களுக்கெல்லாம் பாண்டிய நாட்டில் ஏற்பட்ட பஞ்சம் நீங்கிய செய்தியைத் தெரிவித்து அவர்கள் எல்லோரையும் அழைத்து வருமாறு ஏவலாளர்களுக்குக் கட்டளையிட்டான். அவர்கள் ஊர் ஊராகச் சென்று, தமிழ்ப் புலவர்களைத் தேடி அழைத்து வருவார் ஆயினர்.

அவ்வாறு மதுரை திரும்பிய புலவர்கள் நாற்பத்தொன்பது பேர் ஆவர். அரசன் அவர்களைக் கண்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தான். அவர்களைப் பழைய

புலவர் மன்றத்துக்கு அழைத்துச் சென்று அங்குத் தமிழா ராய்ச்சி புரியச் செய்தான். முன்பு மதுரையில் புலவர் மன்றத்தில் வீற்றிருந்த புலவர்களில் பலர், புதியராக வந்த புலவர்களிடையே காணப்பட்டனர். அரசன் அவர் களோடு அளவளாவி அவர்களது புலமையை அறிய லானான். எல்லோரும் எழுத்தையும் சொல்லையும் நன்கு ஆராய்ந்தவர்கள் என்றும், பொருளதிகார ஆராய்ச்சி மிகவும் குறைந்தவர்கள் என்றும் தெரிந்துகொண்டான். தொல்காப்பியத்தின் பொருளதிகாரத்தை முற்றக் கற்று நினைவில் வைத்திருந்தவர் ஒருவரும் இல்லை. பொருளதி காரத்தில் வல்லுநர் எவரும் இல்லையென்பதை உணர்ந்த அரசனுக்கு வருத்தம் மிகுந்தது. ''எழுத்ததிகாரத்தையும் சொல்லதிகாரத்தையும் ஆராய்வது, பொருள் அதிகாரத் தின் பொருட்டாக அன்றோ ? பொருளதிகாரம் இல்லை யேல் ஏனைய இரண்டு அதிகாரங்களைக் கற்றும் பயனில்லையே'' என்று அரசன் மிகவும் கவலையுற்றான்.

## மன்னனது கவலையை இறைவன் போக்குதல்

கவலையுற்ற மன்னன், மதுரை நாயகன் சோம சுந்தரக் கடவுளை வழக்கம்போல் ஒருநாள் சென்று வணங்கி அவரிடம் தன் குறையைத் தெரிவித்து அரண்மனை மீண்டான். மதுரேசர் மன்னனுடைய நிலைமையைச் சிந்தித்தார். ''ஐயோ பாவம், உக்கிரப் பெருவழுதி மிகவும் கவலைப்படுகிறான். நாட்டில் பன்னீராண்டுப் பஞ்சம் ஏற்பட்டகாலை புலவர் வெளியூர்களுக்கு அனுப் பிய போதுகூட அவன் இத்துணை வேதனைப்படவில்லை. இன்று பொருளதிகாரம் அழிந்துவிட்டதே என்பதை நினைந்து நினைந்து வருந்துகிறான். தமிழ் மொழிக்குத் தனிச் சிறப்பைத் தருவது பொருள் இலக்கணம் அன்றோ?

ஆதலின் பொருளதிகாரம் மறைந்து விட்டால் தமிழ் மொழி நிரம்பிய மொழி ஆகாதே என்றுதான் அரசன் கவலைப்படுகிறுன். இனி அவனுடைய கவலையை நீக்குவது நமது கடமையே. இதை இப்பொழுதே நிறை வேற்றுவோம்'' என்று ஆலவாய் சொக்கநாதர் திருவுளங் கொண்டார்.

தமிழில் பொருள் இலக்கணம் **அகம், புறம்** என்ற இருபகுதியுடையது. அவ்விரண்டினுள் மிகச் சிறந்தது அகப்பொருள். அந்த அகம் **களவு, கற்பு** என்ற இரு கூறுகளாகும். அவ்விரண்டினுள் களவே கற்பை விடச் சிறந்தது. ஆதலின் களவை விரிவாகவும் கற்பைச் சற்றுச் சுருக்கமாகவும் விளக்கி அகப்பொருள்பற்றி அறுபது நூற்பாக்களை எழுதுவோம் என்று இறையனுர் முடிவு செய்து மூன்று செப்புத் தகடுகளைப் படைத்து அவற்றில் களவியலைப்பற்றி முப்பத்திமூன்று நூற்பாக்களையும், கற்பியலைப்பற்றி இருபத்தேழு நூற்பாக்களையும் எழுதி நூலை முடித்துத் தமது பீடத்தின்கீழ் அத் தகடுகளை இட்டு வைத்தார்.

## ஆதிசைவருக்குப் பொருளதிகாரம் கிடைத்தல்

அன்று இரவே கோயிலில் பூசை செய்யும் ஆதி சைவரின் கனவில் சிவபெருமான் தோன்றி "அன்பனே! நீ கோயிலைத் துப்புரவு செய்யும்போது என் பீடத்தின் அடிப்பகுதியை அலகிடுவதில்லையே? ஏன் அப்படிச் செய்கிருய்? நாளை என் பீடத்தின் அடியையும் அலகிடு" என்று உணர்த்தினுர்.

ஆதிசைவர் மறுநாட்காலையில் சொக்கநாதப் பெருமானுடைய கோயிலுக்குச் சென்றார். வழக்கப்படி தண்ணீர் தெளித்து அலகிட்டுச் சுத்தம் செய்தார். இறைவனுடைய பீடத்தின்கீழ் ஒருபொழுதும் அலகிடும் வழக்கம் அவருக்குக் கிடையாது. ஆனால் முதல் நாள் இரவு கனவில் இறைவன் குறிப்பிட்ட செய்தி நினைவுக்கு வரவே பீடத்தின்கீழும் அலகிட்டார். அலகிட்ட திரு வலகை எடுக்கும்போது அது கனமாக இருந்தது. அலகை வெளியே கொண்டு வந்து நோக்கவே அவ்வலகில் மூன்று செப்புத் தகடுகள் சிக்கிக்கொண்டிருந்தன. அந்தத் தகடுகளில் எழுத்துக்கள் காணப்பட்டன. **பொருளதிகாரம்** என்று முதல் தகட்டில் தலைப்பு குறிக்கப் பட்டிருந்தது.

பொருளதிகாரம் அறிந்த புலவர்கள் கிடைக்க வில்லையே என்று உக்கிரப் பெருவழுதி கவலைகொண்டிருக் கிறான் என்பதை ஆதிசைவர் அறிவார். அந்தச் செப்புத் தகடுகளைக் கண்டதும் சிவபெருமானே நம் அரசனுடைய துயரைப் போக்கப் பொருளதிகாரத்தை எழுதிக் கொடுத் திருக்க வேண்டும் என்று ஆதிசைவர் தீர்மானித்தார். கடவுள் வழிபாட்டை நிகழ்த்தியவுடன் அவர் நேரே அரண்மனையை நோக்கி நடந்தார்; தமது வருகையை வாயில் காவலர்மூலம் அரசனுக்குத் தெரிவித்தார். அரசன் வாயில் காவலருக்கு ஆதிசைவரை உள்ளே விடு வதற்கு அனுமதி கொடுக்கவே, ஆதிசைவர் செப்புத் தகடு களுடன் அரசனைச் சென்று அடைந்து அத் தகடுகளை மன்னனிடம் சேர்ப்பித்தார்.

## பொருளதிகாரத்துக்கு உரை காணுதல்

வேந்தன் தகடுகளை ஆவலோடு நோக்கினுன். தலைப்பில் 'பொருளதிகாரம்' என்று குறிப்பிட்டிருந்ததைக் கண்டு அவன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ஓரளவு பொருளதிகாரத்தைப்பற்றி அறிந்த அவனுக்கு அந் நூலில் காணப்பட்ட அறுபது சூத்திரங்களும் படிக்கப் படிக்க இனிமையாக இருந்தன. அந் நூல் தொல்காப் பியத்தைவிட அழகாகவும் சுருக்கமாகவும் இருப்பதாக அரசனுக்குத் தோன்றியது. அது உருவில் மிகச் சிறியதாய் இருந்ததால் அதில் உள்ள செய்திகளை யெல்லாம் விளக்கி அதற்கு ஓர் உரை இயற்றிவிக்கவேண்டும் என்ற எண்ணம் அரசன் உக்கிரப் பெருவழுதிக்கு உண்டாயிற்று. உடனே சங்கத்திலிருந்த புலவர் பெருமக்கள் நாற்பத்தொன்பதின் மரையும் அரண்மனைக்கு அழைத்துவரச் செய்தான். அரசன் சங்கப் புலவர்களைச் சந்திப்பது எப்பொழுதும் பிற்பகலிலேயே நிகழும். அன்று முற்பகலில் தம்மை அழைத்ததன் காரணத்தை அறியாத புலவர்கள் விரைவாக வந்து பாண்டியனைச் சந்தித்தார்கள்.

அரசன் முகத்தில் இருந்த ஒரு தனி மகிழ்ச்சி அவர் களுக்குப் பெரும் வியப்பை உண்டுபண்ணியது. "புலவர் பெருமக்களே! நான் உங்களை அழைத்ததன் காரணத்தை நீங்கள் அறிவீர்களா?" என்று வேந்தன் வினவினுன். புலவர்கள் "இந்த முற்பகலில் எங்களைக் கூப்பிட்டு அனுப்பியதால் ஏதோ சிறப்பான செய்தி இருக்கிறது என்பதை மட்டும் உணர்கிறோம்" என்றனர். அரசன் தனக்குப் பொருளதிகாரம் கிடைத்த நிகழ்ச்சியைத் தெரிவித்து அந்தச் செப்புத் தகடுகளை அவர்களிடம் கொடுத்து அந் நூலுக்கு விரிவான

சிறந்த உரை ஒன்று இயற்றித் தருமாறு வேண்டினான். புலவர்களும் செப்புத் தகடுகளை எடுத்துக்கொண்டு தமது மன்றத்துக்குச் சென்றனர். அங்கு நாற்பத்தொன்பது புலவர்களும் அறுபது சூத்திரங்களையும் பிரதி செய்து கொண்டனர். ஒவ்வொருவரும் தனித்தனியே உரை எழுத ஆரம்பித்தனர். இடையிடையே தோன்றும் ஐயங்களை இருவர் மூவராகக் கூடி ஆராய்ச்சி செய்து தீர்த்துக்கொண்டனர். இவ்வாறு அருமையாக முயன்று தம் புலமையை அளவு கருவியாகக் கொண்டு, ஒவ்வொரு வரும் ஓர் உரை எழுதிவைத்தனர்.

## காரணிகனுடைய தேவை

பின்பு நாற்பத்தொன்பது புலவர்களும் கூடித் தாம் வரைந்த உரையை ஆராய்ச்சி செய்யத் தொடங்கினர். பல சூத்திரங்களுக்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையாக உரை எழுதியிருந்தனர். 'மற்றவர் எழுதியது தவறு; தாம் எழுதியதே உண்மை உரை' என்று காரணங்காட்டி ஏனைய உரைகளை மறுத்துத் தம் உரையை நிலைநாட்டும் ஆற்றல் ஒருவருக்கும் இல்லை. எது சிறந்த உரை என்று ஒருவராலும் முடிவு செய்ய இயலாமற் போயிற்று. எல்லோரும் மன்னனிடம் சென்று தமக்கு ஒரு காரணிகனைத் தரவேண்டும் என்று வேண்டுவதாக உறுதி செய்தனர். புலவர் நாற்பத்தொன்பது பேரும் அரசனிடம் சென்றனர்.

புலவர்களைக் கண்ட அரசன் "புலவர்களே! நூற்குப் பொருள் ஆராய்ந்து விட்டீர்களா? நூலின் உரை எந்த அளவில் இருக்கிறது?" என்று வினவினான். புலவர்கள் "அரசே! நாங்கள் நாற்பத்தொன்பது பேரும் தனித் தனியே உரை எழுதினோம்; பிறகு சேர்ந்து ஆராய்ந்

தோம். உண்மையான உரை எதுவென்று எங்களால் முடிவு செய்ய இயலவில்லை. எங்களது உரையை ஆராய்ந்து முடிவு செய்ய ஒரு காரணிகனைத் தருதல் வேண்டும். அவன் எதைச் சிறந்த உரை என்று சொல்லுகிருனே அதனை ஏற்றுக் கொள்ளுகிறோம்'' எனத் தாம் வந்த காரணத்தைப் புலவர்கள் குறிப் பிட்டனர்.

''புலவர்களே! நீங்கள் கூறுவது எனக்கு வியப்பாக இருக்கிறது. உங்கள் உரையைப் பரிசீலனை செய்வதற்கு ஒரு சிறந்த புலவன் வேண்டும் என்று கூறுகிறீர்களே. நான் சிறந்த புலவனை எங்குச் சென்று கொணர்வேன். மற்றும் உம்மைப் போன்ற ஒரு புலவன் கிடைக்காமை யால்தானே உங்கள் எண்ணிக்கை ஐம்பது என்ற ஒரு வரையறையை எய்தாமல் நாற்பத்தொன்பது என்ற குறை எண்ணுக இருக்கிறது. ஆதலால் உங்கள் உரையைப் பரிசீலனை செய்வதில் நான் என்ன செய்ய முடியும்'' என்ருன் அரசன். புலவர்களில் ஒருவரும் மறுமொழி கூற முடியவில்லை.

சிறிது நேரம் அரச சபை மௌனமாக இருந்தது. பிறகு ஏதோ முடிவுக்கு வந்தவன்போல் அரசன் பேச ஆரம்பித்தான். ''புலவர்களே! நீங்கள் உரை எழுதும் இலக்கணம் சாதாரண நூல் அன்று. புலவர்களோ முனிவர்களோ அதை இயற்றவில்லை. அதை இயற்றிக் கொடுத்தவர் சொக்கநாதப் பெருமான். நமது மனக் கவலை நீங்க நூல் இயற்றியளித்த அந்தப் பெருமானிடமே சென்று, சிறந்த உரை எது என்று தெரிவிக்குமாறு முறையிடுவோம். இதுபற்றி உங்கள் கருத்து யாது?''

என்றான் வேந்தன். புலவர்கள் யாவருக்கும் அது சிறந்த வழியாகத் தோன்றியது. எனவே வழக்கப்படி மாலையில் புலவர்களும் அரசனும் சொக்கநாதப் பெருமானுடைய ஆலயத்துக்குச் சென்று மதுரேசரை வழிபட்டுத் தம் குறையைக் கூறி அவரது சந்நிதியிலே தியானத்தில் அமர்ந்தனர். நடு இரவில் அசரீரியாகச் சில சொற்கள் எல்லோருடைய செவியிலும் விழுந்தன.

"இம் மதுரை மாநகரின் உப்பூரிகுடி என்ற பகுதியிலேயே ஒரு வேளாளர் இருக்கிறார். நேர்மையிலும் குணத்திலும் அவர் மேம்பட்டவர். ஆதலின், அவரை உப்பூரிகுடி கிழார் என்று அழைக்கிறார்கள். அவர் கடவுள் பக்தி மிகுந்தவர். அவர் முருகப்பெருமானிடத்தில் மட்டற்ற பற்றுக்கொண்டவர். அவருக்கு நெடுநாள்வரை பிள்ளைப்பேறு இல்லை. ஐந்து ஆண்டுகளுக்குமுன் ஓர் ஆண் மகவு பிறந்தது. அக் குழந்தைக்கு முருகப்பெருமானின் பெயர்களுள் ஒன்றாகிய **உருத்திரசன்மன்** என்ற பெயர் இடப்பட்டது. அக் குழந்தை இப்போது ஐந்து வயதுச் சிறுவனாக இருக்கிறான். அவனுக்குப் பேசத் தெரியாது; ஊமை என்றுகூடச் சொல்லலாம். அவனுடைய கண்கள் பூனைக் கண்களைப்போல இருக்கும். தலைமயிர் செந்நிறமாக இருக்கும். அவன் முருகப்பெருமானுடைய அமிசம் ஆவான். அவன் பார்ப்பதற்குச் சிறுவனாக இருக்கிறானே என்று ஏளனமாக நினைக்காமல், அழைத்துக்கொண்டு போய் அவனை உயர்ந்த பீடத்தில் அமர்த்திக் கீழே நின்றுகொண்டு ஒவ்வொரு புலவராகத் தாம் இயற்றிய உரையைப் படிக்கவேண்டும். அவன் உண்மை உரையைக் கேட்டால் கண்களிலிருந்து தாரைதாரை

யாகக் கண்ணீர் பெருக்குவான்; உடம்பிலுள்ள மயிர் அவனுக்குச் சிலிர்க்கும். சிறப்பில்லாத உரையைக் கேட்டால் அவன் செவிடனைப்போல ஒரு வேறுபாடும் இன்றி உட்கார்ந்திருப்பான். அவனே உங்களுக்குக் காரணிகன்'' என்று அசரீரி கூறியது.

அரசனும் சங்கத்தாரும் தியானத்திலிருந்து எழுந்தனர். ஒவ்வொருவரும் தாம் செவியுற்ற ஆகாய வாணியைக் குறிப்பிட்டுப் பேசலாயினர். இதுவும் இறைவனின் திருவருள் என்று மனத்திற்கொண்டு சங்கத்தினர் தமது இருப்பிடம் திரும்பினர்.

## மெய்யுரை பெறப்பட்டமை

விடியற்காலையில் சங்கப் புலவர்கள் கிளம்பி உப்பூரி குடி கிழாருடைய இல்லத்தை அடைந்தனர். உப்பூரிகுடி கிழார் அவர்களை முகமன் கூறி வரவேற்றார்; அவர்கள் வந்த காரணத்தை வினவினர். தாம் நடு இரவில் அசரீரி யாகக் கேட்ட செய்தியைப் புலவர் எல்லோரும் உப்பூரி குடி கிழாரிடம் எடுத்துரைத்தார்கள். அவருடைய திரு மகன் உருத்திரசன்மனை அன்று ஒருபொழுது மட்டும் தங்களிடம் ஒப்படைக்குமாறு வேண்டினர். உப்பூரிகுடி கிழார் மனம் மகிழ்ந்து மகனைக் கூப்பிட்டுச் சங்கத்தாரிடம் ஒப்படைத்தார். சங்கப் புலவர் உருத்திர சன்மனை மிக்க மரியாதையோடு சங்கம் கூடும் அரண் மனைப் பகுதிக்கு அழைத்துச் சென்றனர்.

உருத்திரசன்மனை நறுமணப் பொருள்கள் கலந்த நீரில் குளிப்பாட்டினர். அவனது சிவந்த தலைமயிருக்கு நறுமணத் தைலம் தடவினர். அவனுடைய இடையில்

ஒரு வெள்ளிய ஆடையை உடுத்தினர். உடம்பில் வெண் சாந்து பூசினர். ஒரு சிறந்த ஆசனத்தைச் சற்று உயர மான மேடையில் அமைத்து அதில் உருத்திரசன்மனை மரியாதையோடு அமர்த்தினர்.

சங்கப் புலவர் நாற்பத்தொன்மரின் பெயர்களும் ஓலைச் சுருள்களில் தனித்தனியே எழுதப்பட்டன. ஓலைகள் ஒரு குடத்தில் போடப்பட்டன. ஒரு சிறுவனைக்கொண்டு ஒவ்வொரு சுருளாக எடுக்கச் செய்தனர். அச் சுருளில் யாருடைய பெயர் இருக்கிறதோ அவரே உருத்திரசன்மன் முன்னிலையில் நின்று கொண்டு தாம் எழுதிய உரையைப் படிப்பது என்று முடிவு செய்யப்பட்டது. இவ்வேற் பாட்டால் உரை சொல்வ தற்குச் சங்கப் புலவர்கள் எந்த முறையில் வர வேண்டு மென்பது நிர்ணயிக்கப்பட்டது.

முதலில் சிறுமேதாவியர் என்பவர் உருத்திர சன்மனின் முன்னிலையில் நின்று தமது உரையைப் படித்தார். அவனுடைய நிலையில் எந்த மாறுதலும் ஏற்படவில்லை. பிறகு சேந்தம் பூதனார், அறிவுடை அரசனார், பெருங்குன்றூர்க்கிழார், இளந்திருமாறன் முதலிய பலரும் தமது உரைகளை முறையே வந்து படித்தனர். உருத்திரசன்மனுடைய நிலையில் எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை. முப்பதாவதாக மருதன் இளநாகனார் தமது உரையைப் படித்தார். உருத்திர சன்மன் சிற்சில இடங்களில் கண்ணீர் வடித்தான். அவனது மெய், மயிர் சிலிர்த்தது. ஆனால் பெரும்பாலும் அவர் உரை படித்தபோது அவன் பழையபடி, கண்ணீர் விடாமலும் மெய் சிலிர்க்காமலும் வாளா அமர்ந்திருந்

தான். முதலில் இளநாகனார் உரையே சரியான உரை என்று நினைத்த புலவர்களுக்கு அவனுடைய நிலை ஏமாற்றம் அளித்தது.

இளநாகனாருக்குப்பின் பதினெட்டுப் பெயர்கள் முறையே குறிக்கப்பட்டன. அப் பதினெட்டுப் புலவர்களும் தமது உரையைப் படித்துக் காட்டியும் உருத்திர சன்மனிடம் மாறுதல் எதுவும் காணப்பெறவில்லை. எஞ்சியுள்ள உரை நக்கீரர் உரையே. அந்த உரையாவது பழுதற்ற உரையாக இருக்கவேண்டுமே என்று சங்கப் புலவர் மனத்திற்குள் எண்ணமிட்டனர்.

நக்கீரர் முதற் சூத்திரத்தைப் படித்து உரை சொல்லத் தொடங்கினார். சோர்ந்து உட்கார்ந்திருந்த உருத்திரசன்மன் நிமிர்ந்து உட்கார்ந்தான். புலவருடைய கண்கள் யாவும் அவனையே நோக்கின. நக்கீரர் தமது உரையைப் படித்துக்கொண்டே போனார். உருத்திரசன்மனுடைய கண்கள் ஜீவநதிகளைப் போலக் கண்ணீரைப் பெருக்கிக்கொண்டே இருந்தன. அவன் உடல் பெருமகிழ்ச்சியால் துள்ளியது; மயிர் சிலிர்த்தது. ஓர் இடத்திற்கூட உருத்திரசன்மனுடைய கண்ணீர் பெருகுவது தடைபட்டதாகத் தெரியவில்லை. நக்கீரர் அறுபதாம் சூத்திரத்து உரையைக் கூறி முடித்தார். உருத்திரசன்மன் கண்ணீரும் நின்றது. அவன் ஆசனத்திலிருந்து எழுந்தான். சங்கத்தார்களும் அரசனும் நக்கீரரைப் புகழ்ந்தவாறே எழுந்து நின்றனர். உருத்திரசன்மனை அவன் தந்தையிடம் கொண்டுபோய் விட்டனர்.

சொக்கநாதப் பெருமானுடைய கருணையைப் புலவர் வியந்து போற்றினர். நக்கீரரைச் சங்கத் தலைவராகக் கொண்டனர்.

## இறையனுர் களவியல்

சொக்கநாதர் இயற்றிய நூல் ஆதலினுலும், அந்த நூல் அகப்பொருளைப் பற்றியே குறிப்பிடுவதாலும் அந் நூலுக்கு **இறையனுர் அகப்பொருள்** என்று பெயரிடப் பட்டது. அதில் களவு என்ற ஒழுக்கம் பற்றிய சூத்திரங் கள் முப்பத்துமூன்று; கற்புப் பற்றிய சூத்திரங்கள் இருபத்தேழு. களவு மிகுதியாக இருந்தமையால் **இறையனுர் களவியல்** என்றும் பெயர் வழங்கப்பட்டது. அந் நூல் சிவபெருமானுல் அருளிச் செய்யப்பட்டது எனவும், அதற்கு நக்கீரனுராலேயே நல்லுரை முதலில் எழுதப் பட்டது எனவும், பேராசிரியர் என்ற பெரியாரும், அரசஞ்சண்முகனுர் முதலிய பெரும் புலவர்களும் குறிப்பிடுகின்றனர்.

இறையனுர் யார் என்பது பற்றி இக் காலத்தில் கருத்து வேறுபாடு உள்ளது. இறையனுர் என்னும் பெயர் சிவபெருமானைக் குறிக்காது என்றும், அப் பெயர் கொண்ட சங்கப் புலவர் ஒருவர் இருந்தார் என்றும் சிலர் கூறுவர். மயேச்சுரன் என்ற புலவருடைய பெயரே இறையனுர் என மாறியது என்றும், அப் புலவர் இயற்றிய நூலே இந்தக் களவியலாகும் என்றும் கூறுவர். பலர் பலவாறு கூறினும் "இறையனுர் களவியல்" என்று வழங்கும் அறுபது சூத்திரங்கொண்டு அந்த நூல் சிறந்த முறையில் இயற்றப்பட்டது என்பதையும், அதனுடைய உரை திட்ப நுட்பங்கள் கொண்ட பழைய உரை என்பதையும் எல்லோரும் ஏற்றுக்கொள்கிறுர்கள்.

இறையனர் அகப்பொருளையும் தொல்காப்பிய அகப் பகுதிகளையும் அடிப்படையாகக்கொண்டே திருக் கோவையார் உரை, நம்பி அகப்பொருள், மாறன் அகப் பொருள், இலக்கண விளக்க அகத்திணையியல் முதலியன பிற்காலத்தில் தோன்றின. இந் நூல்கள் அகப் பொருட் செய்திகளைத் தொகுத்துக் கூறுவனவாகும். அவ்வகப் பொருட் செய்திகளைச் சுருங்கக் கூறுதல் மாணக்கருக்கு ஓரளவு பயன்தரும் என்று கருதிச் சுருக்கித் தருகின்றேம்.

TAMIL NADU ARCHIVES LIBRARY

## அகப்பொருளின் இலக்கணம்

ஒத்த அன்பினை உடைய தலைவனும் தலைவியும் தம் உள்ளத்தே அனுபவிக்கும் இன்பம் அகப்பொருள் (அகம் = உள்ளம்) எனப்படும். அவ்வின்பம் எத் தன்மைத்து என்று இருவராலும் கூற இயலாது. இன்பம் பற்றி அகத்தே நிகழும் ஒழுக்க நிகழ்ச்சிகளைக் கூறுவது அகத்திணை ஆகும் (திணை-ஒழுக்கம்). அகத்திணையை ஒருதலைக் காமமாகிய கைக்கிளை, அன்புடைக் காமமாகிய குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்திணை, பொருந்தாக் காமமாகிய பெருந்திணை என்ற ஏழு பிரிவுகளாகச் சான்றேர் பிரித்துளர்.

குறிப்பு: மேற்கூறியவற்றின் விரிவுகளையும் விளக்கங்களை யும் ஆரும் படிவ இலக்கணப் பகுதிகளில் ஓரளவு காணலாம்.

திருமணம் முடிப்பதற்குமுன் தலைவன் தலைவி யருடைய ஒழுக்க நிகழ்ச்சிகளைக் **களவு** என்றும், திருமணம் முடிந்தபின் அவர்களுடைய ஒழுக்க நிகழ்ச்சி களைக் **கற்பு** என்றும் குறிப்பிடுவர்.

தலைவனும் தலைவியும் இல்வாழ்க்கையில் அன்பு கொண்டு நன்மக்கட் பெற்று, சுற்றந்தழுவி, விருந்தோம்பி, ஒழுக்கங்காத்து, அடக்கம்பூண்டு, ஆள்வினையுடைய வராய் வாழ்ந்து, உலகப்பற்றைக் குறைத்துக் கடைசி யில் தம் ஊரைவிட்டு வனத்தில் வாழும் நிலையிலிருந்து, பிறகு முற்றும் துறந்த துறவு நிலையிற் பொருந்தி, பேரின்ப வீடு பேற்றை அடைய முயல்வர் என்று அகப்பொருள் முடிவாகக் குறிப்பிடுகிறது.

## 3. ஐயனரிதனர்

### சேரரும் தமிழ்ப்புலவரும்

தமிழ் வளர்த்த பெருமை பெரும்பாலும் பாண்டியருக்கே உரித்தாகும் என்றாலும், சேர மன்னரும் தமிழ்ப் புலவராயும், புரவலராயும் இருந்திருக்கிறார்கள் என்ற செய்தி சங்க இலக்கியங்களிலிருந்து அறியக் கிடக்கின்றது. பதிற்றுப் பத்து என்ற தொகை நூல் சேர வேந்தர் பதின்மரது வீரத்தையும் கொடையையும் பற்றிக் குறிப்பிடவே எழுந்தது என்றால் சேரர் தமிழைப் போற்றினர் என்பதற்கு வேறு சான்றும் வேண்டுமோ? சேர மன்னர் ஒவ்வொருவரும் தம்மைப் பாடிய புலவர்களுக்குப் பெரும் பரிசில் தந்து அனுப்பினர் என்பது பதிற்றுப் பத்தின் ஒவ்வொரு பதிகத்தாலும் அறியப்படுகிறது.

### ஐயனரிதனரும் தமிழ்நூல்களும்

அத்தகைய சேரரது பரம்பரையில் கி. பி. 6-ஆம் நூற்றாண்டின்பின் ஐயனரிதனர் என்ற பெரியார் தோன்றினர். 'குலவிச்சைக் கல்லாமல் பாகம்படும்,' ஆதலின் அவர் இளமையிலேயே அரசர்க்குரிய வில்வாள் பயிற்சி, யானையேற்றம், குதிரையேற்றம் முதலியன கற்றுத் துறை போனர். அரசியலில் நுணுக்கமாக அறியக் கூடிய நீதிநூல்களையும் நன்கு பயின்றார். கடவுட் பற்று மிகுந்த பரம்பரையில் தோன்றிய இப் பெரியார் தாமும் சிவபெருமான், திருமால் முதலிய தெய்வங்களை வழிபட்டு வந்தார்.

அரசியலுக்குத் தேவையான நூல்களைத் திறம்படக் கற்ற ஐயனரிதனர் தமிழ்மொழியின் பழைய நூல்களை முறையாகக் கற்று ஆராய்ச்சி செய்யத் தொடங்கினர். தமிழின் பழைய நூல்களாகிய அகத்தியம், மாபுராணம், பூதபுராணம் என்பன வழக்கு ஒழிந்து அழிந்துபோனமை கண்டு மனம் பதறினர். தொல்காப்பியத்தை முறையாகக் கற்றார். அதனுடைய திட்பநுட்பங்களை வியந்தார். தொல்காப்பியத்தின் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் இவ்விரண்டையும்விடப் பொருள் அதிகாரமே அவருடைய மனத்தை மிகவும் கவர்ந்தது. அவர் அதனைப் பன்முறை படித்து ஆராய்ச்சி செய்தார். அகத்தைப் பற்றிய பகுதியை விரிவாகப் பாடிய தொல்காப்பியர், புறத்தைப் பற்றிய செய்தியைச் சுருக்கிச் சூத்திரங்கள் செய்துவிட்டாரே என்று நினைக்க அவருடைய மனத்தில் வருத்தம் ஏற்பட்டது. விரிவாகப் புறத்தைப் பற்றிய நூல்கள் எவையேனும் இருக்கின்றனவா என்று முயன்று பார்த்ததில் பன்னிரு படலம் தமிழ் நாட்டில் அருகிக் கிடைப்பதை ஐயனரிதனர் உணர்ந்தார். கிடைத்த சுவடிகளும் பயன்படாமல் அழிவுறு நிலையில் இருப்பதை அறிந்தார். அந்தச் சுவடிகள் சிலவற்றை ஒப்புநோக்கிச் சரியான சூத்திரங்களைப் படியெடுத்துக்கொண்டார். நூலை இயற்றியவர் ஒருவரல்லர் பன்னிருவர் என்று அறிந்த ஐயனரிதனர், பன்னிருவரும் இயற்றிய பன்னிரண்டு படலங்களையும் பலநாட்கள் முயன்று ஆராய்ச்சி செய்தார்.

பன்னிரு படலத்தைப் பின்பற்றி, உரிய இடங்களில் தொல்காப்பியத்தையும் தழுவித் தாம் பன்னிரண்டு பெரும் பிரிவுகளையுடைய ஒரு புறப்பொருள் நூல் எழுத வேண்டும் என்று ஐயனரிதனர் முடிவு செய்தார். எந்தச்

சூத்திரமும் இரண்டு அடிகளுக்கு மேற்படக் கூடாது என்றும், சில இன்றியமையாத இடங்களில் மட்டும் மூன்று அடிகள் வரையில் சூத்திரம் அமைக்கலாம் என்றும் அவர் ஓர் நியதியை ஏற்படுத்திக் கொண்டார். ஒவ்வொரு பெரும் பிரிவின் தொடக்கத்தும் அதன் உட்பகுதிகளாகிய துறைகளின் பெயரைத் தொகுத்துக் கூறிப் பின் துறைகளை விளக்கிக் கூறுவது என்றும், ஒவ்வொரு துறைக்கும் ஓர் உதாரணப் பாடல் தாமே இயற்றியமைப்பதாகவும் ஐயனரிதனுர் தீர்மானித்தார்.

ஒரு நன்னுளில் நல்லோரையில் நூல் இயற்றத் தொடங்கினுர். காத்தற் கடவுளாகிய திருமாலைப்பற்றி இரண்டு துதிப்பாடல்களையும், வேண்டிய பயன் அளிக்கும் சிவபெருமானைப்பற்றி இரண்டு துதிப் பாக்களையும் முதலில் பாடி முடித்தார். பிறகு நாமகள் வணக்கமாக ஒரு பாடலைப் பாடி அதை நூலுக்கு முகப்புப் பாடலாக வைத்தார். சிவபெருமான், திருமால் இவர்களைப் பற்றிய பாடல்களைப் பாடாண் திணையின் உதாரணப் பாடல்களுக்காக வைத்துக் கொண்டார். வெற்றிவீரரது கீர்த்தி, கொடைத்திறன் முதலியவற்றைப் புகழ்ந்து கூறுதல் **பாடாண் திணை** எனப்படும். பிறகு பன்னிரு படலத்தைப் பின்பற்றி வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை என்ற பன்னிரண்டு பகுதிகள், உண்டாக்கி அவற்றுள்ளும் அடங்காதனவற்றைக் குறிக்க ஒழிபு என்ற பதின்மூன்ரும் பகுதியும் கொண்டார். ஒவ்வொரு சூத்திரத்துக்கும் உதாரணமாக ஒரு வெண்பாவைப் பாடினுர். கைக்கிளைப் படலத்தில் மட்டும் பெரும் பகுதிகளுக்கு உதாரணச்

செய்யுட்களை மருட்பாவாகப் பாடினர். தமது நூலின் ஒழிபுப் பகுதியில் சூத்திரம் இல்லாமல் தலைப்பை மட்டும் கொடுத்து உதாரண வெண்பாக்களே பாடினர். பெரும் பிரிவுக்குப் படலம் என்றும், உட்பிரிவுகளுக்குத் துறை என்றும் பெயரிட்டார்.

ஐயனரிதனர் பதின்மூன்று படலங்கள் கொண்ட புறப்பொருள் நூலை முந்நூற்று அறுபத்தொரு துறைகளில் முடித்தார். அங்ஙனம் தாம் இயற்றிய நூலைச் சிறந்த புலவர் மன்றத்தில் அரங்கேற்றினர். அவர் செய்த தமிழ்த் தொண்டினைப் புலவர் கூட்டம் வியப்புடன் புகழ்ந்தது. புறப்பொருள் பற்றி அவர் செய்த ஆராய்ச்சி புலவர்களுக்கு வியப்பை அளித்தது. அகப் பொருளுக்கு இறையனர் களவியல் அமைந்ததுபோலப் புறப்பொருளுக்கு இந் நூல் உதாரணத்துடன் அமைந்தது குறித்து, இனிப் புறப்பொருள் இலக்கணத்தை வருங்காலத் தமிழகம் தவறுகள் இல்லாமல் உணரும் என்று எல்லோரும் ஒருமுகமாய்ப் புகழ்ந்துரைத்தார்கள். இந் நூலில் உள்ள ஒவ்வொரு வெண்பாவும் சூத்திரத்தை ஒத்த அழகோடு விளங்கிப் புலவர்களது உள்ளத்தில் இடம் பெற்றது. ஆதலின் இந் நூற்குப் '**புறப்பொருள் வெண்பாமாலை**' எனப் பெயரிட வேண்டுமென்று எல்லோரும் முடிவு செய்தனர். அங்கிருந்த புலவர்களுள் தலைசிறந்த பெரியார் ஒருவர் நூலுக்குச் சிறப்புப் பாயிரம் இயற்றி அளித்தார். அந்தச் சிறப்புப் பாயிரத்தில் ஐயனரிதனர் பன்னிரு படலத்தின் அமைப்பைப் பின்பற்றி இந் நூல் செய்ததைக் குறிப்பிட்டுள்ளார்.

## புறப்பொருள் வெண்பாமாலையின் சிறப்பியல்புகள்

இன்று பன்னிரு படலம் வழக்கு அழிந்தது. ஆனாலும் புறப்பொருள் வெண்பாமாலையின் சிறப்புப் பாயிரத்தால் அது எப்படி இருந்திருக்கும் என்று சிறிது அறிவதற்கு இடம் இருக்கிறது. புறப்பொருள் வெண்பா மாலை தோன்றிய காலத்திலிருந்து அது தமிழ் நாட்டில் மிகவும் பரவுவதாயிற்று. அதிலுள்ள உதாரணப் பாடல் களின் அழகை வியவாத புலவர் இல்லை. அந் நூலிலுள்ள வெண்பாக்கள் பலவற்றையும் சூத்திரங்கள் சிலவற்றை யும் நச்சினார்க்கினியர், பரிமேலழகர், அடியார்க்கு நல்லார், இளம்பூரணர் முதலிய பெரிய உரையாசிரியர்கள் எடுத்து ஆண்டிருக்கிறார்கள். 'குட்டித் தொல்காப்பியம்' என்று புகழப்படும் இலக்கண விளக்கத்தில் இந் நூற்பாடல்கள் பெரும்பான்மையாக எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கின்றன. புறப்பொருள் வெண்பாமாலை தோன்றியதிலிருந்து பன்னிரு படலத்தின் பெருமை வரவரக் குறைந்து நாளடைவில் அது வழக்காறு அற்று விட்டது.

புறப்பொருள் வெண்பாமாலைக்குப் பிறகு புறப் பொருளைப் பற்றிய நூல் எதுவும் தோன்றவில்லை. இலக்கண விளக்கத்திலுள்ள புறத்திணைப் பகுதியைப் புலவர்கள் புறப்பொருள் வெண்பாமாலையைப் படிப்பதைப் போல அவ்வளவு ஆர்வத்துடன் படிப்ப தில்லை. சுருங்கச் சொல்லின் இன்று தமிழுக்குப் புறப் பொருள் இலக்கணம் என்று பெரும்பாலான புலவர்களால் குறிப்பிடப்படுவதும் எடுத்தாளப்படுவதும் புறப்பொருள் வெண்பாமாலையே. இத்தகைய புறப்பொருள் வெண்பா

மாலைக்கு உரை வகுத்த பெரியார் சாமுண்டி தேவநாயகர் என்ற வேளாளர் குலத் திலகராவர். இவர் சிவபெருமானை வழிபட்டவர்.

## புறப்பொருளின் இலக்கணம்

இனிப் புறப்பொருள் வெண்பாமாலையில் குறிப்பிடப் பட்டுள்ள புறப்பொருள் இலக்கணத்தைச் சுருக்கிக் கூறுவோம்.

அகப்பொருளைப் போன்று ஒத்த அன்புடையாரே யன்றி எல்லோராலும் அனுபவித்து அறியப்பட்டு, இஃது இவ்வாறு இருந்தது என மற்றவர்கட்குக் கூறப்படும் பொருள் **புறப்பொருள்** எனப்படும். அதுபற்றி நிகழும் ஒழுக்கம் **புறத்திணை** என்று கூறப்படும். ஆதலால், அறனும் பொருளும் பற்றிப் புறத்தில் நிகழும் ஒழுக்க நிகழ்ச்சிகளைக் கூறுவது புறத்திணை ஆகும்.

அஃது அறமும் பொருளும், அவற்றின் நிலையின்மை யும், அவற்றின் நீங்கிய வீடு பேறும் ஆகிய இவற்றைப் பற்றிக் கூறப்பெறுவது ஆகும்.

அகத்திணை ஏழு ஆனாற்போன்று அதற்குப் புறமாகிய புறத்திணையும் **வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண்** என ஏழு திணைகளாக வகுக்கப்படும். இவற்றைப்பற்றி விரிவாக ஆரும் படிவ இலக்கணத்தில் படிக்கலாம்.

# 4. புத்தமித்திரனூர்

பல நூற்றுண்டுகளுக்கு முன்னரே வடமொழிச் சொற்கள் தமிழில் வந்து வழங்கலாயின. முதலில் அவற்றின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்தது; நாளடைவில் வடமொழிச் சொற்கள் ஓரளவு தமிழில் கலந்து வழக்கத்தில் வந்தன. அவ் வடமொழிச் சொற்களை அவை உள்ளபடியே தமிழ் நூல்களில் எடுத்தாள முடியாது. அவற்றைத் தமிழ் ஒலிக்கு ஏற்றபடி திரித்திக் கொள்ள வேண்டும். அங்ஙனம் திரித்து அமைத்துக் கொள்ளும் முறையைத் தொல்காப்பியர் சுருக்கமாகக் குறிப்பிட்டனர்.

## சமணர் (ஜைனர்)களின் தமிழ்த் தொண்டு

இந் நிலையில் சமண சமயம் தமிழ் நாட்டில் பரவலாயிற்று. சமணர்கள் வடமொழியில் நிரம்பிய புலமை உடையவர்கள். அவர்கள் வடமொழியிலுள்ள இலக்கியங்களைத் தமிழ்ப்படுத்த முயன்றபோது பல வட சொற்கள் தமிழில் வந்து கலந்தன. சமணர்கள் தமிழுக்குச் செய்த தொண்டு அளவிடத்தக்கதன்று. இலக்கியங்களும் இலக்கணங்களும் அவர்களால் புத்துயிர் பெற்றன. யாப்பருங்கலக் காரிகை, யாப்பருங்கல விருத்தி, நன்னூல், சின்னூல், வெண்பாப் பாட்டியல் முதலிய சிறந்த இலக்கண நூல்கள் சமணர்களால் இயற்றப் பட்டனவே. சிந்தாமணி, பெருங்கதை, யசோதா காவியம், நாககுமார காவியம், உதயண காவியம், நீலகேசி, சூளாமணி, மேரு மந்திரபுராணம் முதலிய இலக்கியங்கள் சமணர்களாலேயே இயற்றப்பட்டன. இவற்றுல் சமணர்கள் தமிழ் ஆக்கத்துக்குப் பெரிதும் பாடுபட்டார்கள் என்பது வெளிப்படை.

## பௌத்தர்களின் தமிழ்த் தொண்டு

சமணர்களைப்போலவே பௌத்தர்களும் தமிழ்த் தொண்டில் ஈடுபட்டு மணிமேகலை முதலிய இலக்கியங்களையும், வீரசோழியம் முதலிய இலக்கணங்களையும் சிறந்த முறையில் தமிழ் உலகத்திற்கு ஆக்கி அளித்தனர். அவர்கள் காலத்தில் வடமொழிச் சொற்கள் மிகுதியாகத் தமிழில் வந்து வழங்கத் தொடங்கியதால் வடமொழி இலக்கண முறைகளில் சில தமிழுக்கும் ஏற்கும் என்ற எண்ணம் மக்களுக்கு ஏற்படலாயிற்று. எனவே இக் காலத்தில் இயற்றப்பட்ட தமிழ் இலக்கண நூல்களில் தமிழ் வழக்கங்களேயல்லாமல் வடமொழி இலக்கண முறைகளும் கலந்து கூறப்பட்டன. அத்தகைய நூல்களில் வீரசோழியம் முதல் இடம் பெறுகிறது.

## புத்தமித்திரரும் தமிழ்ப் புலவர்களும்

விசயாலயன் காலத்திலிருந்து தஞ்சை, சோழர்களது தலைநகரம் ஆயிற்று. முதலாவது இராசராசன் காலம் முதல் சோழ நாடு மிக உயரிய நிலையில் இருந்து வந்தது. அரசர்களும் பெரிய செல்வர்களும் புலவர்களை ஆதரிக்க முற்பட்டனர். இராசராசனுக்குப்பின் ஆண்ட இராசேந்திர சோழனின் (1012—44) கடைசி மகன் வீரராசேந்திரன் (1062—70) தமிழில் நிரம்பிய புலமை வாய்ந்தவன். தமிழ்ப் புலவர்களிடம் பெருமதிப்புக் காட்டுபவன்; அவனுடைய பல பட்டப் பெயர்களில் **வீரசோழன்** என்பதும் ஒன்று.

வீரராசேந்திரன் காலத்தில் **பொன்பற்றி** என்ற ஊர் நீர்வளம் நிலவளம் நிரம்பியதாக இருந்தது. அவ்வூர் மக்கள் செந்தமிழ் அறிவு வாய்க்கப் பெற்றிருந்தனர்.

அவ்வூரை ஆண்ட சிற்றரசர்கள் வீரராசேந்திரனுக்குக் கப்பங் கட்டி வந்தனர். அவர்கள் புத்த மதத்தைச் சேர்ந்தவர்கள். ஆனால் அவர்களுக்குப் பிற மதத்தில் வெறுப்பு இல்லை. அவ்வூர் மக்களுக்குச் 'சமய சுதந்திரம்' இருந்தது. அவ்வூர் அரச பரம்பரையில் **புத்த மித்திரர்** என்பவர் தோன்றினார். அவர் இளமை தொட்டே தமிழ் இலக்கணங்கள் படிப்பதில் ஆர்வம் கொண்டிருந்தார். தக்க ஆசிரியர்களை அடுத்து வட மொழி இலக்கண இலக்கியங்களை முறையாகக் கற்று இருமொழிப் பெரும் புலவர் ஆயினார்; அவரைக் காண வந்த புலவர்களில் அவருடைய கல்வியின் பண்பை வியக்காதவர்கள் இல்லை.

ஒருமுறை புத்தமித்திரர் புலவர்கள் பலருக்கு ஒரு பெருவிருந்து அளித்தார். அவ்விருந்தின் முடிவில் இலக்கணம் பற்றிய பல அருமையான செய்திகளைக் குறிப்பிட்டுவிட்டுத் தொல்காப்பியத்தின் அருமை பெருமைகளை விரித்து உரைத்தார். அந் நூலைப்பற்றிப் பல புலவர்களுடைய கருத்தை வினவினார். வயதும் அனுபவமும் மிக்க புலவர் ஒருவர் எழுந்திருந்து, "அரசே! தொல்காப்பியம் மிகச் சிறந்த நூல் என்பது உண்மை. ஆனால் அது மிகவும் பெரியதாக இருக்கிறது. அதனைக் கற்றுப் புலமை பெறுவது சாதாரணமாக எல்லோருக்கும் இயலுவது அன்று. மேலும் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐந்துவகை இலக்கணங்களையும் நேர்மையான முறையில் அறிவிக்கும் இலக்கணம் வேறு எதுவும் இல்லை. தவிரவும், தொல்காப்பியர் காலத்தில் தமிழ் மொழியில் கலந்து வழங்கிய வடசொற்களும் வட மொழி மரபுகளும் மிகக் குறைவு. இப்பொழுதோ

நூற்றுக்கணக்கான வடசொற்களும் வடமொழிச் செய்தி களும் தமிழில் வந்து வழங்குகின்றன. ஆதலின் இன்றைய நிலையில் தமிழ் மொழிக்கு ஒரு சுருக்கமான சிறந்த இலக்கணம் தேவை. இது ஓரளவுக்கு வடசொல் இலக்கணங்களையும் சேர்த்து விவரிப்பதாய் இருக்க வேண்டும். அத்தகைய நூல் இயற்றுவதற்கு எம்மைப் போன்றவர்கள் தகுதியுடையவர் ஆகார். வடமொழி, தமிழ்மொழி என்ற இரண்டு மொழிகளிலும் நிரம்பிய இலக்கணப் புலமை உடையவர்களே அத்தகைய நூல் இயற்றவேண்டும். அதிலும் நூலைக் கட்டளைக்கலித் துறைப் பாடலாக இயற்றினுல் ஒரே சூத்திரத்தில் பல செய்திகளை அடக்கிவிடலாம். அங்ஙனம் நூல் இயற்றும் தகுதி உடையவர் இங்கு ஒருவரே இருக்கிருர் '' என்று கூறிவிட்டு ஆதனத்தில் அமர்ந்தார். அனைவரும் அத்தகைய புலவர் யார் என்று அறிய ஆவல் கொண்டனர். புலவர் அவருடைய பெயரைக் குறிப் பிடுவார் என்று ஆவலோடு அப் புலவரின் முகத்தையே அனைவரும் பார்த்துக்கொண்டிருந்தனர்.

புத்தமித்திரனுர் எழுந்திருந்தார். தமக்குமுன் பேசிய அந்தப் புலவரை அழைத்தார். "புலவர் பெருமானே! தாங்கள் குறிப்பிட்ட செய்தி எல்லாம் மிக முக்கிய மானவைகளே. ஆனுல் அந்தப் புலவர் யார் என்று குறிப்பிடாமல் உட்கார்ந்து வீட்டீர்களே. ஒருகால் அப் புலவருக்கு வேண்டிய உதவிகளை நான் செய்து கொடுக்க மாட்டேனே என்று ஐயுறுகிறீர்களா? ஒருபோதும் அவ்வாறு நினைக்காதீர்கள். நான் எக் காலத்திலும் அப் புலவர் வேண்டியதை வேண்டியபடி உதவி செய்யக் காத்திருக்கிறேன். தமிழ்த்தாய்க்கு அந்தப் புலவரின்

மூலம் புது இலக்கணம் செய்து கொடுக்கும் பேறு என்னைச் சேரட்டும். அந்தப் புலவர் இயற்றும் இலக்கணத்தை இந்த அவையிலேயே அரங்கேற்றுவோம்'' என்று பரபரப்புடன் அரசர் கூறினர்.

புலவர் சற்று அமைதியோடுகூடிய புன்முறுவலுடன், ''அரசே! அந்தப் புலவருடைய பெருமை எங்களுக்குத் தெரியுமே யொழிய அவருக்குத் தெரியாது. அவருடைய பெயரைக் குறிப்பிட்டு அவரை வேண்டிஞல் அவர் தம்மால் முடியாது என்று கூறிவிட்டால் நமக்கு ஏமாற்றமாகப் போய்விடுமே எனக் கருதிப் பெயரைக் குறிப்பிடாமல் இருந்தேன்'' என்று உரைத்தார்.

அரசர், ''புலவரே! அந்தக் கவலை உமக்கு வேண்டாம். அந்தப் புலவரைக்கொண்டு நூல் இயற்றுவிக்கும் பொறுப்பு என்னைச் சேர்ந்தது. நீங்கள் புலவர் யார் என்பதைக் குறிப்பிடுங்கள். பின்பு ஆகவேண்டுவனவற்றை நான் செய்து கொள்கிறேன்'' எனப் பகர்ந்தார்.

புலவர், ''அரசே! நான் குறிப்பிட்ட இருமொழி இலக்கணக் கடலாக இலங்கும் புலவர்பெருமான் தாங்களே. தமிழுக்கு ஐவகை இலக்கணமும் அமைந்த நூல் ஒன்று தாங்கள் எழுதித் தரவேண்டுமென்பதே எங்கள் வேண்டுகோள்'' எனத் தெரிவித்தார்.

அதனைச் செவியுற்ற சபையோர் வியப்பு எய்தி மௌனமாக இருந்தனர். புத்தமித்திரர் தமது இருக்கையை விட்டு எழுந்தார். 'புலவர்களே! நான் அறியாமலேயே என்னை ஆண்டவன் இந்தத் தமிழ்ப் பணியில் ஈடுபடச்

செய்துவிட்டான். முன்பு அகத்தியனும் தொல்காப்பியனும் இலக்கணம் வரைந்த தமிழுக்கு நானும் இலக்கணம் எழுதுகிறேன். கருடன் பறக்கும் ஆகாயத்தில் ஈயும் பறந்து கொண்டுதானே இருக்கிறது. நான் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐந்து இலக்கணங்களையும், தேவையான அளவுக்கு வட நூல் மரபையும் பின்பற்றிக்கொண்டு சுருக்க நூலாகக் கட்டளைக்கலித் துறையால் பாடித் தருகிறேன். புத்தர் பெருமானுடைய திருவடிகள் எனக்குத் துணையாக இருந்து என் எண்ணத்தை நிறைவேற்றி வைக்கும் என்பது திண்ணம். இயன்ற விரைவில் இலக்கண நூலை எழுதி உங்கள் முன்னிலையிலேயே அரங்கேற்றுகிறேன்'' என்று கூறி முடித்தார். கூட்டம் கலைந்தது.

## வீரசோழியம் அரங்கேற்றப்படுதல்

புத்தமித்திரனார் தம் நூலுக்குக் கடவுள் வாழ்த்து, நூலில் கூறப்படும் செய்தி இவ்விரண்டையும் குறிப்பிடும் தற்சிறப்புப்பாயிரத்தைப் பாடி நூலைத் தொடங்கினார். நூலை எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐந்து பெரும் பிரிவுகளாக வகுத்து ஒவ்வொரு பெரும் பிரிவுக்கும் அதிகாரம் என்று பெயரிட்டார். ஒவ்வோர் அதிகாரத்திலும் உள்ள சிறு பிரிவுக்குப் படலம் என்ற பெயர் அமைத்தார். ஐந்து இலக்கணங்களையும் சுருக்கமாக இனிய நடையில் பாடி முடித்துப் புலவர்களது அவையில் அரங்கேற்றினார். அங்கிருந்த புலவர்கள் அரசரை நோக்கி, '' நூலுக்கு என்ன பெயரிடப் போகிறீர் ?'' என வினவினர். சிலர், அகத்தியர் இயற்றிய நூல் அகத்தியம் என்று ஆயிற்று ; தொல்காப்பியர் இயற்றிய நூல் தொல்காப்பியம் என்ற

பெயர் பெற்றது. அந் நூல்களைப்போலப் புத்தமித்திரர் இயற்றிய நூல் 'புத்தமித்திரம்' என்று வழங்கப்படுவது பொருத்தமாகும்'' என்றனர்.

அரசரோ ''புலவர்களே! நூலின் பெயர் பற்றிய குறிப்பை ஏழாவது பாடலில் தெரிவித்திருக்கின்றேன்'' என்றார். ஏழாம் பாடலில், ''மேவிய வெண்குடைச் செம்பியன் வீரராசேந்திரன், தன் நாவியல் செந்தமிழ்ச் சொல்'' என்று குறிப்பிட்டிருந்ததைக் கண்ட புலவர்கள் இது சோழப்பேரரசனான வீரராசேந்திரன் பெயரைக் கொண்டு விளங்கப் போகிறது என்று உணர்ந்தனர். புத்தமித்திரனார் வீரராசேந்திரனுடைய பட்டப் பெயர் களில் ஒன்றான 'வீர சோழன்' என்பதை அடிப்படை யாகக்கொண்டு அவன் பெயரால் செய்யப்பட்டது என்று பொருள்படும் **வீரசோழியம்** என்று தம் நூலுக்குப் பெயரிட்டார்.

எந்தத் தமிழ் நூலும் நூலியற்றிய ஆசிரியரின் காலத்தில் புகழ்பெற்று விளங்குவது இல்லை. வீரசோழி யத்தின் நிலையும் அஃதே. அந் நூலைப் படிக்கும்போது ஏற்படக்கூடிய ஐயங்களையெல்லாம் அகற்றிக்கொள்ளப் பெருந்தேவனார் என்ற பெரியார் அதற்கு உரை எழுதினார். எனினும் வீரசோழியத்தைப் படிப்பவருடைய தொகை குறைவாகவே இருந்தது.

## கந்தபுராண அரங்கேற்றம்

இஃது இவ்வாறு இருக்க, காஞ்சி நகரிலுள்ள குமர கோட்டத்தில் பூசை செய்து வந்த கச்சியப்ப சிவாசாரியார்

பெரும் புலவராக விளங்கினர். அவர் நினைத்த அளவில் பாடல் இயற்றும் ஆசு கவியாக விளங்கியதைக் கண்ட பெரியோர்கள் அவரை முருகப்பெருமானது வரலாருகிய கந்த புராணத்தை வடமொழியிலிருந்து மொழிபெயர்த்துத் தமிழில் பாடித்தரப் பன்முறை வேண்டினர். சிவாசாரியார் தமக்குத் தகுதியில்லை என்று பலகாலும் கூறியும் அவர்கள் அவரை விட்டபாடில்லை. எனவே அவர் ஒருநாள் முருகப்பெருமானிடம் புலவர்கள் கூறுவதை முறையிட்டு, ''பலர் புகழ் நன்மொழிப் புலவர் ஏறே! உனது புராணத்தை மொழிபெயர்த்துப் பாடும் ஆற்றலை எனக்கு அளிப்பதுடன், நீயே என் நூலுக்குக் காப்புப் பாடல் பாடி அருளவேண்டும்,'' என்று வேண்டினர். அன்று இரவில் இறைவனுகிய முருகப் பெருமான் கச்சியப்பரின் கனவில் தோன்றி, ''அன்பனே! நீ கவலையுருதே. உன் மூலம் எனக்குத் தமிழில் புராணம் பாடுவித்துக் கொள்ளவேண்டும் என்பதே எனது ஆவல். அதைப் புலவர்கள் பலர் மூலம் உன்னிடம் தெரிவித்தேன். 'திகட சக்கரச் செம்முக மைந்துளான்' எனத் தொடங்கிக் காப்புப் பாடலை எழுதி நூலைப்பாடுவதற்கு முற்படுவாயாக'' என்று கூறி மறைந்தார்.

மறுநாள்முதல் கச்சியப்பர், புராணம் பாடத் தொடங்கி வடமொழியிலுள்ள கந்த புராணத்தைத் தமிழில் ஆறு காண்டங்களும் பதினுயிரத்து ஐந்நூறு பாடல்களும் கொண்ட பெருங்காப்பியமாக இனிய தமிழ் நடையில் ஒன்பான் வகைச் சுவைகளும் அமையும்படி பாடி முடித்தார். அந் நூலைக் குமரகோட்டத்திலேயே ஒரு நன்னுளில் அரங்கேற்றுவது எனத் திட்டமிடப் பட்டது.

குறிப்பிட்ட நன்னாளில் புலவர்கள் திரளாகக் காஞ்சிபுரம் குமரகோட்டத்தில் வந்து கூடினர். கச்சியப்பரும் தாம் பாடிய நூற்சுவடிகளோடு வந்து சேர்ந்தார். முருகப்பெருமானை வணங்கி நூலை அரங்கேற்றத் தொடங்கினார். காப்புச் செய்யுளாகிய

"திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர விண்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்"

என்ற பாடலை ஒருமுறை வாசித்து, 'திகழ் தசக்கரச் செம்முகம் ஐந்துளான்' என்ற அடிக்கு "விளங்குகின்ற பத்துத் திருக்கைகளையும் செவ்விய ஐந்து திருமுகங்களையும் உடைய சிவபெருமான்" என்று பொருள் கூறினார்.

உடனே அங்கிருந்த தமிழ்ப் புலவர்களில் ஒருவர் எழுந்து "சுவாமிகளே! திகழ் + தசம் = திகடசம் என்று புணர்வதற்கு விதி தொல்காப்பியம் முதலிய எந்த இலக்கணத்திலும் காணப்படவில்லையே?" என்று நவின்றார்.

அதற்குக் கச்சியப்பர் "புலவரே! நீங்கள் கூறுவது சரிதான். இம் முதலடி என்னுடைய வாக்கு அன்று; சங்கப் புலவராகிய முருகப்பெருமானுடைய திருவாக்கு. அந்த ஞானபண்டிதரே எனக்கு இந்த அடியை எடுத்துக் கொடுத்தருளினார்" என்று மறுமொழி பகர்ந்தார்.

அதற்குப் புலவர் சிரித்துக்கொண்டே "முருகப் பெருமான் தங்களுக்கு இந்த அடியை எடுத்துக் கொடுத் தருளியது உண்மையாக இருக்கலாம். ஆனால் அது

உங்களுக்கு மட்டும்தான் தெரியும். நாங்கள் அதை எப்படி அங்கீகரிப்பது? முருகப்பெருமானே எங்கள் முன்னில் தோன்றி இவ்வடியைத் தாமே இயற்றி அருளியதாகத் தெரிவித்தால் ஏற்றுக்கொள்கிறோம். அல்லது அங்ஙனம் சேர்ப்பதற்கு ஏதாவது ஓர் இலக்கண நூலில் விதி காட்டினால் ஒத்துக்கொள்கிறோம். இல்லையாயின் நூலை அரங்கேற்ற அனுமதியோம்'' என்று கூறினர்.

கச்சியப்பர் ''இவ்விரண்டில் ஒன்று நாளை செய்யப்படும்'' எனக் கூறிச் சபையைக் கலைத்து இரவில் உணவு கொள்ளாது முருகப்பெருமானைத் தியானித்துக் கொண்டிருந்தார். அப்போது முருகனின் அருளினால் உறக்கம் வர, கண் துயின்றார். கனவில் முருகப்பெருமான் தோன்றி ''அன்பனே! கவலையுறுதே. சோழ நாட்டில் வீரசோழியம் என்ற ஒரு சிறந்த இலக்கண நூல் இருக்கின்றது. திகழ் + தசம் = திகடசம் என்று ஆவதற்கு விதி அந் நூலின் சந்திப்படலத்தில் பதினெட்டாம் பாடலில் சொல்லப்பட்டிருக்கிறது. சோழ தேசத்துப் புலவன் ஒருவன் அந் நூலை நாளைக்கு இவ்விடத்துக்குக் கொண்டு வந்து அந்த இலக்கண விதியை அனைவருக்கும் தெரிவிப்பான்'' என்று கூறி மறைந்தார்.

மறுநாள் குறிப்பிட்டபடி புலவர் அவை கூடிற்று. தமக்குக் கனவில் முருகப்பெருமான் தெரிவித்த செய்தியைக் கச்சியப்பர் எல்லோருடைய முன்னிலையிலும் அறிவித்தார். அதுபொழுது ஒரு புலவர் ஒரு சுவடியை எடுத்துக்கொண்டு கச்சியப்பரை நோக்கி வந்தார். அங்கிருந்தவர்கள் அவரை ''நீங்கள் யார்? உங்களுடைய கையிலிருக்கும் நூல் யாது?'' என்று வினவினர்கள்.

அதற்கு அந்தப் புலவர், "நான் சோழ நாட்டைச் சேர்ந்தவன். இந்தச் சுவடி பொன்பற்றிக் காவலனை புத்தமித்திரன் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐந்து இலக்கணத்துக்கும் சுருக்கமாக இடம் அளித்துப் பாடிய 'வீரசோழியம்' என்ற இலக்கண நூல் ஆகும். தொல்காப்பியத்தை அடுத்து இதுவே சிறந்த இயற்றமிழ் இலக்கணம்" என்று மொழிந்தார்.

முதல் நாள் ஆட்சேபனை செய்த புலவர் உடனே புதிதாக வந்த புலவரிடம் சென்று, அப் புத்தகத்தைப் பெற்று, கனவில் முருகப்பெருமான் குறிப்பிட்ட பாடலை அவையோர் அனைவரும் கேட்குமாறு உரக்கப் படித்தார். அதில் 'ழ்' என்ற எழுத்தை இறுதியில்கொண்ட நிலைமொழிச் சொல்லின்பின் வருமொழி முதலில் வல்லினம் வந்து புணர்ந்தால் 'ழ்' என்ற எழுத்து 'ண்' அல்லது 'ட்' ஆக மாறுமென்று விளக்கியிருந்தது. அங்குக் குழுமியிருந்த புலவர் எல்லோரும், "ஐயம் தீர்ந்தது. கந்தபுராண நூலை அரங்கேற்றலாம்" என்று உடன்பட்டனர். நூலும் இனிது அரங்கேற்றப்பெற்றது.

புதிதாக வந்த புலவர் தாம் கொண்டுவந்த வீரசோழியம் என்ற நூலைக் கச்சியப்பரிடம் கொடுத்து விட்டு மறைந்தனர்.

முருகப்பெருமானால் மேற்கோளாகக் காட்டப்பட்ட சிறப்பு வாய்ந்த வீரசோழியம் காஞ்சிபுரப் பக்கத்தில் வாழ்ந்த தொண்டைநாட்டுப் புலவராலும் அறியப்பட்டுத் தமிழகம் முழுவதும் பரவியது. பிற்காலத்தில் இயற்றப் பட்ட பிரயோக விவேகம், இலக்கணக்கொத்து முதலிய நூல்களுக்கு வீரசோழியம் ஆதாரமாக அமைந்தது.

# 5. வைத்திநாத தேசிகர்

## திருவாரூரின் சிறப்பு

திருவாரூர் சரித்திரப் புகழ்பெற்ற ஒரு பழம் பதியாகும். அவ்வூரைத் தலைநகராகக்கொண்டு மனுநீதிச் சோழன் ஆண்டு வந்ததாகப் பெரியபுராணம் குறிப்பிடுகிறது. முதலாம் இராசராசன் திருவாரூர்த் தியாகராசப் பெருமானிடம் அளவிறந்த பற்றுக் கொண்டவனாய் அடிக்கடி திருவாரூர் சென்று அவ்விறைவனை வழிபட்டு வந்தான் என்று அறிகிறோம். சோழமன்னர் பலரும் அக் கோயிலுக்கு அளித்த மானியங்கள் பலவாகும். அம் மானியங்களின் வருவாயைக்கொண்டு கோயிலில் பூசை முதலிய பணிகள் நடத்தப்படுகின்றன. இந்த மானியங்களுக்குக் கட்டளை என்று பெயர். அவற்றுள், இராசாங்கக் கட்டளை, அபிடேகக் கட்டளை, அன்னதானக் கட்டளை போன்றன மிகப் பெரியனவாகும். இராசாங்கக் கட்டளை தருமபுர மடாதிபதிகளால் நிர்வகிக்கப்படுவதாகும். அபிடேகக் கட்டளை, அன்னதானக் கட்டளை என்ற இரண்டும் இப்பொழுது வேளாகுறிச்சி ஆதீனத்தாரால் நிர்வாகம் செய்யப்படுகின்றன. இந்த ஆதீன மடாதிபதிகள் தாங்களாகவே நேரில் இந்த நிர்வாகங்களைக் கவனிக்க முடியாமையால் தங்களுக்குக்கீழுள்ள தம்முடைய சீடர்களான சைவத் துறவிகளைக்கொண்டு, இக் கட்டளைகளின் நிர்வாகத்தைக் கவனித்து வருவர். இந்தச் சைவத் துறவிகள் தம்பிரான் என்றும், முனிவர் என்றும் அழைக்கப்படுவர்.

## அகோரமுனிவர்

மேற்கூறிய கட்டளைகளில் ஒன்றான அபிடேகக் கட்டளையைப் பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில்

நிர்வாகம் செய்தவர் **அகோரத் தம்பிரான்** என்ற துறவி ஆவார். இவர் அகோரமுனிவர் என்றும் அழைக்கப் படுவார். இவர் அகோர சிவத்தியாகராச பண்டாரம் என்று கணக்குகளில் கையொப்பமிடுவார். இவர் கமலை ஞானப்பிரகாசரது பரம்பரையில் சைவ சந்நியாசம் பெற்றவர்.

சிதம்பரத்தில் வாழ்ந்த தில்லை மூவாயிரவரில் ஒருவரான திருமாளிகைத் தேவரிடம் அகோரமுனிவர் வடமொழியை நன்கு பயின்றார். தமிழ் மொழியையும் நன்கு பயிலவேண்டும் என்ற ஆர்வம் இவருக்கு உண்டு. ஆனால் அதற்குள் அகோரமுனிவர் திருவாரூருக்குக் கட்டளைத் தம்பிரானாக அனுப்பப்பட்டார். கோயில் அலுவல்களுக்கு இடையேயும் இவர் தமது கல்வியிலுள்ள ஆர்வத்தில் குறையாதவராய், வடமொழி நூல்களோடு அடிப்படையான சிறு தமிழ் நூல்களையும் கற்றுவருவார் ஆயினர். கோயில் நிர்வாகம் சீரிய முறையில் நடத்துபவர் என்று இவரை ஊரிலுள்ளோர் அனைவரும் கொண்டாடினர்.

## அகோரமுனிவர் தமிழ் பயின்றமை

ஒருநாள் தெருவில் சென்று கொண்டிருந்தபோது, ஒரு வீட்டுத் திண்ணையில் ஒரு பெரியார் அமர்ந்து சில மாணவர்களுக்குத் தமிழ்ப்பாடம் சொல்லிக்கொண் டிருந்ததை அகோரமுனிவர் கண்ணுற்றார். அப் பெரியாரை அடிக்கடி கோயிலில் கண்ட நினைவு அகோர முனிவருக்கு ஏற்பட்டது. அவர் பரம்பரைச் சைவா சாரியர் மரபிலே தவவணைக் குடியில் பிறந்த **வன்மீகநாத தேசிகர்** என்றும், அவர் சிறந்த புலவர் என்றும், தம்

பாவன்மையால் அரசரிடம் சூனும்பேட்டை மானியமும், உப்பளமும் பரிசு பெற்ருர் என்றும் அகோரமுனிவர் அறிந்தனர் ; அப்பொழுது பாடம் சொல்லிக்கொடுக்கும் நிலையில் நடுவில் இடையூருகத் தாம் தேசிகரிடம் உரையாடுவது முறையாகாது எனக் கருதிக் கோயிலுக்குச் சென்றுவிட்டார்.

அன்று மாலையில் ஆலய வழிபாட்டிற்குச் சென்று மீண்ட வன்மீகநாத தேசிகரைச் சந்தித்து அகோரமுனிவர் தமக்குத் தமிழ்ப்பாடம் சொல்லித்தருமாறு வேண்டினர். வன்மீகநாதரும் முனிவரின் விருப்பத்தை மறுக்க அஞ்சி ஒப்புக்கொண்டார். முனிவரும் மற்ற சீடர்களைப் போல மிகப் பணிவுடன் வன்மீகநாதரிடம் தமிழ் நூல்களை முற்றக் கற்றுத் துறைபோனர்.

இதற்கு இடையில் வன்மீகநாதரின் மூத்த மனைவியார் காலம் ஆனர். பலருடைய வற்புறுத்தலின் பேரில் வன்மீகநாதர் இரண்டாம் மனைவியை மணந்தார். அவ்வம்மை தன் மூத்தாளின் குழந்தைகளைக் கொடுமையாக நடத்த ஆரம்பித்தாள். அங்ஙனம் அவளுடைய தொல்லைகளுக்குப் பெரிதும் ஆளானவன் வன்மீகநாதருடைய மகனுன வைத்திநாதனே. அகோர முனிவர் வைத்திநாதனுடைய நிலையை அடிக்கடி கவனித்தார். தாம் வன்மீகநாதரிடம் கல்வி கற்றலை முடித்துக்கொண்டதும் தம்மிடம் வைத்திநாதரை அனுப்புமாறும், தாம் அவரைக் கவனித்துக் கொள்வதாகவும் தெரிவித்தார். வன்மீகநாதரும் குடும்ப நிலையைக் கருதி வைத்திநாதரை அகோரமுனிவரிடம் ஒப்படைத்தார்.

## வைத்திநாதருக்குக் கல்வி கற்பித்தமை

அகோரமுனிவர் வைத்திநாதரைத் தம் பராமரிப்பில் வைத்துக்கொண்டு கல்வி பயிற்றுவித்து வந்தனர். தமது இருமொழிப் புலமையையும் பயன்படுத்தி வைத்தி நாதருக்கு இருமொழியிலும் புலமை நிரம்புமாறு பாடம் சொல்லி வந்தார். வைத்திநாதர் விருப்பப்படி உண்டி முதலியவற்றை உதவி வந்த அகோரமுனிவர் பாடஞ் சொல்லுவதில் மட்டும் மிகவும் கண்டிப்பாகவே இருந்தார். தம்மிடம் படிக்கும்போது வைத்திநாதர் கவனக் குறைவாக இருந்தால் அகோரமுனிவர் அவர்மீது தமது கமண்டல நீரை ஊற்றிவிடுவார் என்று கூறுவதுண்டு. வைத்திநாதருக்கு வேறு கவலைகள் இல்லாமையால் கல்வி கற்பதிலேயே தம் நேரம் முழுவதையும் செலவழிப் பாராயினர். இடையிடையே அகோரமுனிவர் சைவசமய சாத்திரங்களையும் யோக முறைகளையும் வைத்தி நாதருக்குப் போதித்தார். வைத்திநாதர் எல்லாவற்றையும் திறமையுடனும் ஊக்கத்துடனும் கற்றுக் குருவினுடைய அன்புக்கு இலக்கானர்.

## அகோரமுனிவர் காசி யாத்திரைக்குப் புறப்படுதல்

அக் காலத்திலும் காசிக்குச் சென்று கங்கையில் நீராடி விசுவநாதரைத் தரிசித்து வருவது பெறுதற்கரிய பேருகத் தெய்வச் சிந்தனையுடைய பெரியோர்களால் கருதப்பட்டு வந்தது. அகோரமுனிவரும் காசி யாத்திரைக்குச் செல்லும் எண்ணத்துடன் யாத்திரைக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து வருவார் ஆயினர். ஒரு நாள் தம் சீடராகிய வைத்திநாதரை அருகு அழைத்துத் தாம் காசி யாத்திரை செல்லுதற்கு உறுதி செய்துள்ளதைத் தெரிவித்தார்.

அதுதருணம் வைத்திநாத தேசிகர் தம் தந்தையை இழந்து சில ஆண்டுகள் ஆயின. வீட்டில் அவருக்கு வேண்டியவர்களோ வேறு ஒருவரும் இல்லை. ஆகையால் அகோரமுனிவர் காசி யாத்திரைக்குச் செல்லும்போது அவரைப் பிரிந்து தனியே தம் வீட்டில் காலம் கழிப்பதற்கு வைத்திநாத தேசிகரின் மனம் இடம் கொடுக்கவில்லை. அவர் அகோரமுனிவரை நோக்கி "ஆசிரியரே! எனக்குத் தங்களைத் தவிர உற்றார் உறவினர் ஒருவரும் இல்லை. நான் இங்குத் தனியே இருந்து என்ன செய்யப் போகிறேன். மேலும் காசி யாத்திரை செல்லும் பேறு கிடைப்பது அரிது. ஆதலின் நானும் உடன் வருகின்றேன். கருணை கூர்ந்து என்னையும் கூட அழைத்துச் செல்லுங்கள்" என்று கூறி வேண்டினார். அகோர முனிவர் இடை வழியிலுள்ள இன்னல்களைப் பற்றி எடுத்துக் கூறியும் வைத்திநாத தேசிகர் ஒரே பிடிவாதமாக இருந்ததால் முனிவர் வைத்திநாதரையும் உடன் அழைத்துக்கொண்டு காசி யாத்திரைக்குப் புறப்பட்டார்.

## குரு சீடராதல்

இருவரும் ஒரு நல்ல நாளில் பிரயாணத்தை தொடங்கினர்; திருவாரூரை விட்டுப் புறப்பட்டு இடையில் பல தலங்களையும் பார்த்துக்கொண்டு திருவண்ணமலையை அடைந்து ஒரு மடத்தில் தங்கினர். முனிவர் தமது ஆன்மார்த்த பூசையின் பொருட்டுச் சென்றார். வைத்திநாதர் நித்தியக் கடன்களை முடித்துக்கொண்டு பாடப் புத்தகத்தைக் கையில் வைத்த வண்ணம் யோகத்தில் அமர்ந்திருந்தார். தமது பூசையை முடித்துவிட்டு வெளிவந்த அகோரமுனிவர் மாணவருடைய நிலையைக் கண்ணுற்றார். மாணவர் இருந்த நிலை முனிவருக்கு

எவ்வாறு தோன்றியதோ தெரியவில்லை. அவர் வைத்திநாதரை மும்முறை வலம் வந்து தாளில் விழுந்து வணங்கினுர் ; இனித் தாம் சீடரும் வைத்திநாதர் குருவும் ஆகிவிட்டதால் குருவுக்கு உரிய சிறப்புக்களைச் செய்தார்.

அகோரமுனிவருக்கும் வைத்திநாத தேசிகருக்கும் இதுவரை இருந்த தொடர்பு வேறுபட்டுவிட்டது. ஆதலின் தேசிகரைத் தம்மோடு காசிக்கு வரவேண்டாம் என்று முனிவர் கேட்டுக்கொண்டார். தம்மோடு கூடப் படித்த நண்பர் ஒருவர் திருநெல்வேலியில் இருக்கிருர் என்றும், அவர் புலவர்களை ஆதரிக்கும் மனப்பான்மை உடையவர் என்றும் அகோரமுனிவர் வைத்திநாத தேசிகரிடம் கூறித் தேசிகரை அன்னுரிடம் செல்லுமாறு கூறினுர். அச் செல்வருக்குத் தம் கையால் ஒரு கடிதமும் எழுதித் தேசிகரிடம் கொடுத்துத் தாம் மட்டும் காசிச் செலவை மேற்கொண்டார்.

வைத்திநாத தேசிகர் அண்ணுமலையிலிருந்து புறப்பட்டு ஆரூருக்குத் திரும்பினுர். அங்கே தங்கம்மாள் என்ற மாதை மணந்து அவ்வம்மையாரோடு சிறிது காலம் வாழ்ந்து வந்தார். பிறகு ஆரூரிலிருந்து புறப்பட்டுத் திருநெல்வேலியை நோக்கிச் சென்ருர்.

## மாதைத் திருவேங்கடநாதர்

சோழ நாடு காவிரியின் நீர்ப்பெருக்கால் செழிப்புறுவது. காவிரி 'வான் பொய்ப்பினும் தான் பொய்யாச்' சிறப்புடையது. அதன் இரு கரையோரங்களிலும் பல சிறந்த தலங்கள் இன்றும் இருக்கின்றன. அவற்றுள் மாத்தூர் என்னும் மாதை என்பது ஒன்று. அவ்வூரில்

பெருமாளையர் என்ற அந்தணர் இருந்தார்; அவர் திருமாலிடத்தில் மிகவும் ஈடுபாடுடையவர். பெருமாளையர் வாய்மை, நுண்ணறிவு முதலியன இயற்கையாகவே வாய்க்கப் பெற்றவர். இப் பெருமாளையரின் அருந்தவப் புதல்வராகத் தோன்றியவர் திருவேங்கடநாதர். இவரும் தந்தையாரைப் போன்று அருங் குணங்களைப் பெற்றிருந்தார்; கல்வி கேள்விகளிலும் மேம்பட்டிருந்தார்.

அப்போது மதுரையை ஆண்டுவந்தவர் நாயக்க மன்னர் ஆவர். அவர்களுக்குத் திருவேங்கடநாதரின் புகழ் எட்டியது. அவருக்குத் தம் அரசியல் நிர்வாகத்தில் ஓர் உயரிய பதவி அளிக்கவேண்டும் என்று நாயக்க மன்னர் விரும்பினர். திருவேங்கடநாதரைத் தக்க மரியாதையுடன் மதுரைக்கு வரவழைத்து அவரிடம் திருநெல்வேலி சில்லாவிலுள்ள கயத்தாற்றுச் சீமையின் நிர்வாகத்தை ஒப்படைத்தார். அக் காலத்தில் தமது அரசருக்கும் குடிகளுக்கும் இவர் செய்து வந்த நன்மைகள் பல கல்வெட்டுக்களின் மூலம் அறியப்படுகின்றன. இவர் கயத்தாற்றுச் சீமையைப் பரிபாலித்தபோது திருமலை நாயக்கர் மதுரையில் ஆண்டுவந்தார் என்று கூறுவதற்குரிய கல்வெட்டுச் சான்றுகள் கிடைத்திருக்கின்றன. அரசியல் அலுவல்களில் ஈடுபட்டிருந்த காலத்தும் திருவேங்கடநாதர் தமிழ் மொழி ஆராய்ச்சி செய்து பெரும் புலமை எய்தினர்.

### வேங்கடநாதரும் வைத்திநாதரும்

திருமாலின் அடியிணையை மறவாத அன்பராகிய திருவேங்கடநாதருக்கு ஆண் மக்கள் அறுவர் என்று 'பண விடுதூது' பகர்கிறது. அவர்கள் தம் வாழ்க்கையின்

பிற்பகுதிகளில் பேரறிவாளர்களாய்ப் பெரும் பதவி யிலிருந்து புகழ்பெற்றவர்கள் என்பதும் அந் நூலிலிருந்து அறியக் கிடக்கிறது; திருவேங்கடநாதர் தம் மைந்தர் களுக்குச் சிறந்த முறையில் தமிழ் கற்பிக்க விரும்பினர். தாமே புலமை நிரம்பியவர் எனினும் தம் புதல்வர்களுக்குக் கற்பிக்க அவருக்குப் போதிய நேரம் இல்லை. திருவேங்கட நாதரிடம் பரிசில் பெறுவதற்குச் சாமானியப் புலவர்கள் திரள் திரளாக வருவர். அவர்களில் சிலரைத் திருவேங்கட நாதர் தம் சிறுவர்களுக்குப் பாடஞ்சொல்லித் தர இயலுமா என்று கேட்டுக்கொண்டும் ஒருவருக்கும் அதற் குரிய துணிவு பிறக்கவில்லை.

இந் நிலையில் திருவாரூரிலிருந்து கிளம்பித் திருநெல் வேலியை நோக்கிச் சென்று கொண்டிருந்த வைத்திநாத தேசிகர் மாதைத் திருவேங்கடநாதரின் புகழைக் கேட்டு அவர் ஆண்டுவந்த கயத்தாற்றுக்கு வந்து சேர்ந்தார். வைத்திநாத தேசிகரின் புலமையும் ஒழுக்கமும் திருவேங்கடநாதரின் மனத்தைக் கவர்ந்தன. சில நாட்கள் வைத்திநாத தேசிகரைத் தமது விருந்தினராக வைத்துக்கொண்டார். திருவேங்கடநாதருடைய புதல்வர் களும் வைத்திநாத தேசிகரிடம் நட்புடன் பழகத் தொடங்கினர். ஒரு நாள் திருவேங்கடநாதர் வைத்தி நாதரைத் தம் புதல்வர்களுக்குத் தமிழ்ப் பாடம் சொல்லிக் கொடுக்கும் பணியில் ஈடுபடுமாறு வேண்டினர். திருவேங்கடநாதரின் நற்பண்பும் பெருந்தன்மையும், அவருடைய புதல்வர்களது அன்பும் மரியாதையும் வைத்திநாதரின் உள்ளத்தைப் பிணித்துவிட்டன. அவரும் உடன்பட்டனர். சில நாட்கள் விடுமுறை பெற்றுத்

திருவாரூர் சென்று தம் மனைவி தங்கம்மாளை அழைத்துக் கொண்டு கயத்தாறு வந்து சேர்ந்தார்.

## வைத்திநாதர் பாடஞ்சொல்லியமை

வைத்திநாதர் திருவேங்கடநாதருடைய புதல்வர் அறுவருக்கும் தரம் அறிந்து தமிழ் இலக்கிய இலக்கணங் களைப் பயிற்றுவிப்பாராயினர். அவர் அகோரமுனிவரிடம் தொல்காப்பியம், இறையனர் களவியல், புறப்பொருள் வெண்பாமாலை, யாப்பருங்கலம், சின்னூல், வீர சோழியம், நன்னூல் முதலிய நூல்களை உரைகளுடன் முறையாகப் பாடங்கேட்டு மனப்பாடம் செய்தவர்.

அவர் சிறுவர்களுக்கு நன்னூல் கற்பிக்க ஆரம்பித்தார். சிற்சில இடங்களில் நன்னூற் சூத்திரங்கள் நீக்கப்பட்டுப் புதிய சூத்திரங்கள் வைத்திநாத தேசிகரால் சிறுவர்களுக்காக இயற்றப்பட்டன. வைத்திநாத தேசிகர் திருவேங்கடநாதரின் சிறுவர்களுக்கு நன்னூலைப் பாடஞ் சொல்லிய வகையில் நன்னூலுடைய உருவம் மாறித் திருத்தியும், கூட்டியும், குறைத்தும் அமைக்கப் பட்டு அது ஒரு புது நூல் ஆயிற்று. அந் நூலே 'இலக்கண விளக்கம்' என்று பெயரிடப்பட்டது.

## குட்டித் தொல்காப்பியம்

எழுத்து இலக்கணம், சொல் இலக்கணம், பொருள் இலக்கணம், யாப்பு இலக்கணம், அணி இலக்கணம் என்ற ஐந்து இலக்கணங்களையுங் கொண்ட இலக்கண விளக்கம் என்னும் தமது நூலைப் புலவரது அவையில் தேசிகர் அரங்கேற்றலானர். அதுவே வீரசோழியத்தை அடுத்துத்

தமிழில் வழங்கும் ஐந்திலக்கண நூலாகும். அது வீர சோழியத்தைவிட விரிவாகவும் சிறந்தும் அமைந்திருந்ததன் காரணமாகக் **குட்டித் தொல்காப்பியம்** என்ற மறுபெயரால் சிறப்புற்று விளங்குவதாயிற்று.

இலக்கண விளக்கம் அமைந்த வகையை வைத்திநாத தேசிகரின் புதல்வரான சதாசிவ தேசிகர் கீழ்க்கண்டவாறு பாடியுள்ளதை அறிக.

> '' எழுத்து முதல் மூன்றையும் யாவரும் அறியத்
> தொகைவகை விரியின் பகருக என்னு
> வேதியர் திலகன் விரவலர் கோளரி
> மாதையர் அதிபன் வரகுண மேரு
> கல்விக்கு எல்லை கருணைக்கு ஆகரம்
> பெருமாள் மெய்த்தவப் பேறெனத் தோன்றிய
> திருமால் உலகம் செவ்விதின் புரக்கும்
> மேதரு புகழ்த்திரு வேங்கட நாதன்
> ஓதினனுக ............''

## சமகாலப் புலவர்கள்

இத்தகைய ' இலக்கண விளக்கம் ' இயற்றிய வைத்தி நாதர் காலத்தில் வேறு இரண்டு மேம்பட்ட இலக்கணப் புலவர்கள் வாழ்ந்து வந்தனர். ஒருவர் ஈசான தேசிகர் என்று சொல்லப்படும் சாமிநாத தேசிகர். அவர் ' இலக்கணக் கொத்து ' என்ற மிகச் சிறந்த இலக்கண நூலை இயற்றியவர். அவருடைய சீடர் நன்னூலுக்கு உரை வரைந்த சங்க நமச்சிவாயப் புலவர் ஆவர். அவரது இலக்கணக் கொத்திலுள்ள பல செய்திகளைச் சிவஞான முனிவர் தமது நன்னூல் விருத்தி உரையில் எடுத்தாண்டிருக்கிறார் என்றால் ஈசான தேசிகர் பெருமையைக் கூறவும் வேண்டுமோ !

மற்றொருவர் திருக்குருகூரில் வாழ்ந்த சுப்பிரமணிய தீட்சிதர். அவர் வடமொழியில் மிகப் பெரும் புலமை வாய்ந்தவர்; தமிழையும் துருவி ஆராய்ந்தறிந்தவர். சாமிநாத தேசிகர் 'இலக்கணக் கொத்து' என்ற நூலை இயற்றுவதன் முன்னமேயே தமது புலமையை வெளியிடுவதற்கு அளவுகோலாகப் 'பிரயோக விவேகம்' என்ற மிகச் சிறந்த நூல் ஒன்றை இயற்றினார். அந் நூல் சொல்லதிகாரத்தை மட்டும் விளக்கிக் கூறுவதாகும். வடமொழி மரபைப் பல இடங்களில் பின்பற்றித் தமிழ் இலக்கணத்தை அதில் விரிவாக வரைந்துள்ளார். அத்துடன் வடமொழிப் பெயர்களையும் தமிழ் ஒலிக்கு ஏற்பத் திரித்துக் கொண்டுள்ளார். இவற்றிற்கெல்லாம் மேலாகக் கட்டளைக்கலித்துறையில் மிக அழகாகப் பாடப்பட்ட தமது நூலுக்குத் தாமே சிறந்த உரை ஒன்று எழுதியுள்ளார்.

இதற்கு முன்பெல்லாம் நூல் எழுதுபவர்களே தம் நூலுக்கு உரை எழுதும் வழக்கம் தமிழ் மொழியில் இல்லை. வைத்திநாத தேசிகரே தாம் தொகுத்துப் புதுக்கியாத்த 'இலக்கண விளக்க'த்துக்குத் தாமே உரை தயாரித்தார். இம் முறையை முதன்முதல் தொடங்கிய பெருமை தேசிகரையே சாரும். அம் முறையைப் பின்பற்றிச் சுப்பிரமணிய தீட்சிதர் தாம் இயற்றிய பிரயோக விவேகம் என்ற நூலுக்குத் தாமே உரையும் எழுதி வைத்தார். இவ்விருவருடைய செயல்களையும் கண்ட சாமிநாத தேசிகர் தாமும் தமது நூலுக்குத் தாமே உரை இயற்றி வைத்தார். அங்ஙனம் எழுதியதோடு அமையாமல் நூலாசிரியனே தன் நூலுக்கு உரை எழுதுவது முறையாகுமோ என்று அவர் ஒரு கேள்வி

கேட்டுக் கொண்டு, அதற்கு விடை கூறும் வாயிலாக வைத்திநாத தேசிகரும் சுப்பிரமணிய தீட்சிதரும் தாம் இயற்றிய நூல்களுக்குத் தாங்களே உரை இயற்றியதைச் சான்றாகக் குறிப்பிடுகிறார். அவ்வடிகள் பின்வருமாறு:

"நூல் செய்தவன் அந்நூற்குரை எழுதுதல்
முறையோ எனினே அறைகுதும் கேண்மின்
முன்பின் பலரே என்கண் காணத்
திருவா ரூரில் திருக்கூட் டத்தில்
தமிழ்க்கிலக் காகிய வைத்தி நாதன்
இலக்கண விளக்கம் வகுத்துரை எழுதினன்
அல்லதூஉம் தென்திசை ஆழ்வார் திருநகர்
அப்பதி வாழும் சுப்பிர மணிய
வேதியன் சொற்பிர யோக விவேகம்
வகுத்துரை எழுதினன் ............"

இங்ஙனம் 'இலக்கண விளக்கம்' என்ற நூலை யாத்து அதற்கு உரையும் வகுத்த வைத்திநாதர் பொருளதிகாரத்தில் அகத்திணையியல், புறத்திணையியல், அணியியல், செய்யுளியல் என்ற நான்கு இயல்களையே அமைத்திருந்தார். பிறகு பாட்டியல் என்பது அவருடைய மகனாகிய தியாகராச தேசிகரால் இயற்றப்பட்டது. தற்போது இலக்கண விளக்கப் பொருளதிகாரத்தில் ஐந்து இயல்கள் இருக்கின்றன.

## தேசிகர் பிற ஊர்கள் செல்லுதல்

சில ஆண்டுகளுக்குப்பின் திருவேங்கடநாதரிடம் விடைபெற்றுக்கொண்டு தேசிகர் மலையாளம் சென்று அந் நாட்டு அரசனைப்பற்றி நூல் பாடிப் பரிசில் பெற்றார்; அங்கு அவையில் இருந்த பல புலவர்களாலும் போற்றப் பட்டார்.

22B / 73 / 5 N56

பின்னர் வடபால் சென்று திண்டிவனத்தை அடுத்த மயிலாசலத்திலே எழுந்தருளியிருந்த சிவஞான பாலையர் மீது **பாசவதைப் பரணி** என்ற நூலும், முருகன்மீது **பிள்ளைத்தமிழும்** பாடி அரங்கேற்றிப் பத்துக்காணி நிலமும் உப்பளமும் காணிக்கையாகப் பெற்றார்.

## திருவாரூருக்குத் திரும்புதல்

பிறகு வைத்திநாத தேசிகர் திருவாரூருக்குத் திரும்பி வந்து படிக்காசுப் புலவர் முதலிய சீடர்களுக்குத் தமிழ் கற்பித்து வந்தார். இவருக்குச் சதாசிவம், தியாகராசன், சிதம்பரநாதன், வடுகநாதன், வன்மீகநாதன் என்ற ஐவர் மக்கள் இருந்தனர். ஐவரும் சிறந்த புலவர்களாகத் திகழ்ந்தனர்.

வைத்திநாதருடைய சமகாலத்தவரான அந்தகக் கவி வீரராகவ முதலியார் இவரைச் சங்கப் புலவரோடு வைத்து எண்ணிப் பாடியுள்ளார். பாசவதைப் பரணி, திருவாரூர்ப் பன்மணி மாலை, நல்லூர்ப் புராணம், திருவாட் போக்கிப் புராணம், கமலாலய அம்மை பிள்ளைத்தமிழ் முதலிய நூல்களும் இவரால் இயற்றப் பட்டனவே.

17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இந்தப் புலவர் பெருமானுடைய பரம்பரையினர் இப்பொழுதும் தமிழ்ப் புலவர்களாக இருப்பது மகிழ்தற்குரியதாகும்.

> "வாழ்க தமிழ்மொழி, வாழ்க தமிழ்மொழி
> வாழ்க தமிழ்மொழியே."

---

ஸ்ரீ மஹாபாரதம் பிரஸ், கும்பகோணம்.

# ILAKKANA ASIRIYAR IVAR

(IN TAMIL)

BY

VIDVAN T. V. GOPALAN B. O. L.

V. S. VENKATARAMAN & Co.

EDUCATIONAL PUBLISHERS

Sri Veda Vinayagar Street | 144, Sri Ramakrishna Mutt Road

KUMBAKONAM | MYLAPORE :: MADRAS-4

As. 12